1005

Reg. No. M. 2324.

தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

20 NOV 1928

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0

புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஹு செப்டம்பர் மீ 27உ [No. 39.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	761
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	763
3.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A.,B.L.	765
4.	சூர்ப்பநகை R. முத்தையர்	767
5.	மதிப்புரை	768
6.	தமிழ்ப் பாடம்	769
7.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	771
8.	வானசாஸ்திர	773
9.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A.,B. L.	774
10.	அரிஸ்தோத்லன் T. R. இராஜகோபால்	776
11.	வர்த்தமானம்	779

கலா நிலயம்.

189022

சிறுமையும் பெருமையும்.

நாம் பிறரோ டளவளாவி உரையாடும்போதும், நமதுள்ளத்தின் நினைவிலே ஆழ்ந்து தனித்திருக்கும் போதும், கழிவிரக்கங்கொண் டுழலுங்காலையும், காமக்குரோதாதிகளால் கொதிக்கும் நிலையிலும், வியப்பெய்தி நிற்கும் வேளையிலும், பல்வேறு வேடத்தோடு நம்மையே நாம் நடிக்கக் காணும் கனவுகளிலும், இவையனைய பிறவற்றிலும் நிகழ்கின்றன எவையென்று நாம் ஊன்றிக் கருதுவோமாயின், மானுடத் தன்மையின் மறைபொருளினது அறிவைப் பெருக்கிவிளக்கவல்ல குறிப்புக்கள் எண்ணிறந்தன நாம் உணர்தற் கியன்றவர்களாவோம். இவையாவும், மனித ஆன்மா அவயவங்களை இயக்குவதேயன்றித் தானேயொரு அவயவம் அன்றென்பதைத் தெரிவிக்கும். ஞாபகம் சிந்தனை பகுத்தறிவு போன்றவொரு சக்தியுமன்று ஆன்மா; இவைகளை அது தனக்குக் காலும் கையையும் போல் உபயோகப்படுத்திக் கொள்கின்றது. புத்திக்கும் மனதிற்கும் அது மேலதிகாரியாதலால் அதுவே புத்தியேனும் மனமேனும் அன்று. மானுடத்தன்மை நின்றுதோன்றுமாறு பின்னமைந்த களமொன்றாகும் அவ்வான்மா. மனிதன் தனக்கு உடைமையாக்கிக் கொள்ளாததும் கொள்ள இயலாததுமான வோர் அகண்டாகாரம் அது. நம்முள்ளிலிருந்தேனும் நமக்குப் பின்புறத்திலிருந்தேனும் உலகப் பொருள்களின்மேல் ஒளியொன்று பரவுகின்றது. அவ்வொளியைக் காணும் ஆற்றலுடையேமாயின், நாமென்று நினைக்கின்ற இவ்வெளித் தோற்றமும் புல்லிய வாழ்க்கையும் ஒன்றெனக் கருதுதற்கும் தக்கதன் றென்றும், அனைத்து மவ்வொளியே யென்றும் தேர்ந்தவராவோம். அனைத்தறிவும் அனைத்து நன்மையும் தங்கி வைகுமோர் கோவிலின் கோபுர வாயிலையொத்தவன் மனிதன். தின்பதும் குடிப்பதும் உழுவதும் கணக் கெண்ணுவதும் வழக்காடுவதும் வீண்வம்பு பேசுவதும் உத்தியோகம் செய்வதுமாய உலக விவகாரங்களைச் செய்கின்ற சமயங்களிலெல்லாம் மனிதன் தன்னைத்தா னுண்மையிலுள்ளவாறு தெரிவித்துக் கொள்கின்றவனல்லன். உண்மையோ ஒருபுற மிருக்க இவன் இத்தகைய கருமங்களைச் செய்வதி லமைந்ததினால் மனிதன் தானென்று காட்டுவதெல்லாம் பாவனையே. இன்னவனை நாம் ஒரு பொருளாக மதியோம். ஆனால், அவன் செய்யும் காரியங்களினூடே ஆன்மா தோன்றும்படி செய்வானாயின் அன்றே நாம் வணக்கமுடன் பணியுமாறு புரிகின்றான். இவ்வான்மோதயம் புத்தியின் மூலமாய்த் தோன்றுமாயின் அதனை முதுக்குறைவு என்போம். சிந்தனையின் மூலமாய்த் தோன்றுமாயின் தர்மம் என்போம். உலகத்தோ டுறவாடுந் தன்மையில் காணுங்கால் அதனையே அன்பென்றும் கூறுகின்றோம்.

ஆதலின், மனிதனின் பெருமையை உணர வேண்டுமாயின் அவனது புத்தியையும் சிந்தையையும் உலக விவகாரங்களையும் எடுத்துக் காட்டுவதால் யாதும் பயனில்லை. புத்தியானது தன்வரையில் தானேபெருமை யளிக்க வல்லதென்று மதிக்குமாயின் அப்பொழுதது குருட்டுப் புத்தியேயன்றி வேறில்லை. மனமானது தன்னையே பற்றி நிற்க முயலுமாயின் நிலைதளர்ந்து சோரு மென்பதற்கு ஐயமில்லை. கருமத்தின் தகுதியை ஆராயாமல் எதுவே யாயினும் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதே வீரமும் பெருமையுமாகும் என்னுங்

கொள்கை நிலவுமாயின் அப்பொழுது முற்றிய கருமம் முடமேயாய் நிற்பதாகும். எனவே, புத்திபலம் மனோபலம் தேகபலங்களால் சாதிக்கப்பெற்றனவென்று மனிதனுடைய பெருமைக்குச் சான்றாக எடுத்துக்காட்டும் செய்திகள் யாவும் அன்னான் பெருமையையே உண்மையில் குறிக்கத்தான் வேண்டும் என்னும் நியதியில்லை. இவைகளில் அவனது ஆன்மாவின் தோற்றமும் காணுமாயின் அவை பெருமையுடையவைகளே. இல்லையெனில் அவைகளெல்லாம் அவன் சிறுமைக்கே அறிகுறிகளாய் நிற்கின்றன.

மனிதன் கற்கவேண்டிய கல்விகளிலெல்லாம் மிகப் பெரியது மனிதனே, என்று ஆங்கிலக் கவி போப் என்றொருவர் சொல்லியிருப்பது பிரசித்தம். இதன் பொருள் யாதெனில் அவன் பெருமையையும் சிறுமையையும் உள்ளவாறுணரும் ஆற்றலைப் பெறுவதாம். இதனை உணர்த்திவைக்க வேண்டும் எனும் ஆவல் பலருக்கு உளது. ஆனால் இவர்களிற் பலர் மனிதனின் சிறுமையையே கண்டு கண்டு பழகியுள்ளார்களாதலினால் அவன் பெருமையின் தன்மை எத்தகையதென்பதைத் தெள்ளிதினுணராதிருத்தல் வியப்பன்று. ஆதலின், இச்சிறுமை நீங்குமளவிற்றானே பெருமைநிலை எய்துகின்றதென்னும் எண்ணத்திற்காளாகின்றனர்.

கல்லாமை மடமை தீயவொழுக்கங்கள் அசுத்தச் செயல் நினைவு முதலியன யாவும் மனிதன்பால் தோன்றுங்கால் அவை அவனது கீழ்மையைக் குறிக்குமென்பது உண்மையே. இக்கீழ்மையைத் தீர்ப்பதற்குச் செய்யும் முயற்சிகளில் நாடகமும் நாவல்களும் மிகச் சிறந்தனவென்பது சிலருடைய கொள்கை. இக்கொள்கையின்படி, உலகத்தில் பல்வகையாலும் வெறுக்கத்தக்கனவா யிருப்பவைகளையெல்லாம் திரட்டி நாடக மேடையில்நடித்துக்காட்டுவதும் நாவல்களில் எழுதிக் காட்டுவதும், காண்போர் படிப்போர் தம் வாழ்க்கையினின்று அத்தியதாய பழக்கவக்கங்கள் அகல்வதற்கு ஐயமற்ற ஆதாரமா யிருக்கவேண்டும் என்பது முதல் துணிபு. தங்கள் தங்கள் பேதைச் செயல்களையும் குணங்களையும் மற்றுள கீழ்மை நினைவுகளையும் நாடக மேடையில் பிறர் நடித்துக் காட்டும்போது அவரவர் மனச்சாக்ஷி இடித்திடித்துரைக்கு மாதலால் இவ்வகையிற் பலர் திருந்துவரென எண்ணுவது தர்க்கத்திற்கேனும் அனுபவத்திற்கேனும் பொருந்தி யிருப்பதாகக் காணவில்லையே. நாடகத்திற்குச் சொன்ன இது நாவலிற்கும் ஒக்கும். டம்பாசாரி நாடகம், வேசிமனத் தன்மையின் தாழ்மையை விளக்கி அவள்பால் நாடுபவன் பேதைமையைப் பரிகசித்து எண்ணிறந்த காலமாக எவ்வளவோ பேரால் எத்தனையோ இடங்களில் ஆடப்பெற்று வருகின்றது. இந்நாடகத்தைப் பார்த்துவிட்டுப் பலர் தம் ஆசைவேசியின் வீட்டிற்கே மிகுந்த இரவைக் கழிப்பதற்குப் போவதை யாவரும் அறிவர். இங்கிலாந்தின் நாவலாசிரியர்களில் முதல்தர வகுப்பைச் சேர்ந்த சார்லஸ் டிக்கன்ஸ் என்பவர் "பிளீக் ஹவுஸ்," என்றொரு நாவல் எழுதி இருக்கின்றார். நியாய ஸ்தலங்களேறி வழக்காடுவோர் மதியீனமும் படும் அல்லலும் கெடும் கேடும் அந்தக் கதையில் வருணிக்கப்பட்டிருக்கின்ற திறம் பொதுவற நிற்கின்றது. இங்கிலாந்தில் அதைப் படித்திராதவர் வெகு சிலரே இருப்பர். ஆங்கிலங் கற்ற இந்தியர்களிலும் பெரும்பாலும் அதனை அறியாதார் இரார். இந்நூலைச் சார்லஸ் டிக்கன்ஸ் எழுதியது ஐம்பது அறுபது வருடங்களுக்குமுன். அன்றுதொட்டு இன்றுவரையில் எந்த நியாயஸ்தலத்தில் இந்நாவல் காரணமாக வழக்குக்கள் குறைவடைந்து தொடரலாயின? சிறைச்சாலைகள் ஒரு பக்கமும் நியாயச்சபைகள் மறுபக்கமும் இடமகன்று நெடிதோங்கி எங்கும் வளர்ந்து வருவதை நம் கண்ணிற் காணவில்லையா! ஆயின், 'மைனர்' கைப்பாணத்தையும் கைம்பெண் நிலையையும் சிறுபெண் கலியாணத்தையும், மனைவிச் சண்டையையும் நாடகத்திற்கும் நாவலிற்கும் நிலைக்களமாக்கி வைப்பதில் இன்பமில்லை, பயனுமில்லையே.

இன்பமில்லாதிருப்பதற்குக் காரணம் கூறவேண்டா. இவைகளெல்லாம் விலக்க வேண்டுவன என்னும் முகத்தானே அவை அழகற்றவை என்பது பெறப்படுகின்றது. இவைகளைப்பற்றி நாவலாக எழுதுவோரும் நாடகமாக நடிப்போரும் அழகற்றவைகளைத்தாம் ஜனங்களுக்குக் கொடுப்பதையே தம் கருமமாகப் பூண்டுளார். அழகிலாததொன்றும் இன்பம் பயக்காதாதலால் இவைகளில் இன்பமும் இல்லை என்பது வெளிப்படை

பயனில்லாமற் போவதற்குக் காரணம் முன்னரே ஒரு சிறிது குறித்துள்ளோம். கீழ்மையைக் கண்டு நகைப்பதால் மேன்மையைக்கொண்டு பாராட்டுவதாகாது. ஆன்ம உணர்ச்சியற்ற ஜனங்கள் கணக்கிறந்தவர் நாடோறும் நிமிடந்தோறும் நம்மைச் சூழ்ந்துசூழ்ந்து நம் புன்மையைக் காட்டுவதெல்லாம் கண்டது போதாதென்று அதற்கு விலையுங் கொடுத்து வாங்கப் பார்க்கின்றோம். வெளிச்சம் இன்னதென்று தெரியாத வொருவனுக்கு இருளையே காட்டிக்காட்டி "இப்படி இல்லாதது வெளிச்சம்" என்று வெளிச்சத்தின் தன்மையை உணர்த்தத் தலைப்படுவதைப் போலிருக்கின்றது, ஆன்ம வொளியில்லாச் செயல்களையும் செய்வோரையும் நாடகத்திலும் நாவலிலும் காட்டி மாந்தரை மேன்மக்களாக்க முயல்வதும்.

ஆன்மஞானிகளாய மகா கவிகளின் அருளினால் தோன்றிய ஜீவ காவியங்களே மனிதனுக்கு அவன், சிறுமையைக் கூறினும் கூறாவிடினும், பெருமையை உணர்த்திவைக்கத் தக்கன. உலகமும் வாழ்க்கையும் எப்படிக் கிடந்துழல்கின்றதென்பதைப் படமெடுத்துக் காட்ட வேண்டுமென்னுங் கருத்து இக்காவியங்களுக்கு இல்லையாதலால் அவைகளால் வரும் இன்பத்திற்கு ஒருநாளும் குறைவில்லை. ஆன்மவாசஞ் செய்கின்றவோர் உலகத்தை நம் புலன்களுக்கு எட்டும்படி சிருஷ்டித்து அதனுள் நம்மை வந்து வாழும்படி அழைத்து அவ்வாழ்க்கையால் நாம்மெல்லமெல்ல அவ்வான்மாவிற்குரிய பாஷையைக் கற்குமாறு புரிகின்றார் மெய்த்திறங்கண்ட புலவர். தெலுங்கு பாஷை கற்க வேண்டியவொருவன் நேராகத் தெலுங்கு தேசத்திற்குப் போவதோ, அல்லது மலையாளம், கன்னடம், துளுவம் முதலிய தேசங்களுக் கெல்லாம் மாத்திரம் போய் இவை யல்ல தெலுங்கென்று தெரிந்து கொண்டு வந்துவிட்டால் போதுமோ.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[745-ம் பக்கத் தொடர்ச்சி]

பலரும் பல்வகை யாதல்

சிவகோசரியார் கனவுகண்ட இரவில் திடுதிடு என்று அடித்துக்கொள்ளும் மனத்தோடே கொட்டுகொட்டு என்று கண்விழித்திருந்து பொழுது எப்போது புலருமென்று காத்திருந்தார். பொழுது புலர்ந்ததும் முன்னே போல் வழிபாடு செய்துவிட்டு ஒருபுறமாக ஒளித்திருந்தார்:

உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ ஒளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும்பரிசெல்லாம்காண்கின்றாய்
மனக்கவலை ஒழிகென்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார்

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவும் கண்டுயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமு முடனாகித் [தோன்ற
துனைபுரவித் தனித்தேர்மேல் தோன்றுவான் கதிர்
முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்.

இவ்வாறு ஒளித்திருந்தவர் கண்ணப்பர் செய்தருளிய தெய்விகச் செயலைக் கண்டார். "ஞானமா முனிவர் கண்டார்" என்ற அளவில் சிவகோசரியாரின் கதையைச் சேக்கிழார் விட்டு விட்டார். ஞானியானவர் அத்திருவருட் செயலினைக்கண்டு என்னவாயினார், என்ன செய்தார் என்று விரித்துரைக்க வேண்டுமோ? ஆகவே அதற்குமேல் ஒன்றும் சேக்கிழார் கூறுகின்றார் அல்லர்.

கண்ணப்பர் என்னமோ தானறிந்தபடி தன்னையும் மறந்து நின்று வழிபட்டார். இதனை "அந்நிலையி லன்பனார் அறிந்த நெறி பூசிப்ப" என்று சேக்கிழார் கூறுவதிலிருந்தும் அறியலாம். சிவகோசரியாரோ நூல்கள் கூறியபடி வழிபாடு இயற்றுபவர் என்றும் பன்முறையும் நமது சேக்கிழார் வற்புறுத்துகின்றார்.

எய்தியசீ ராகமத்தி லியம்பிய பூசனைக் கேற்ப" (135)
பூசைமுழுது முறைமையின் முடித்து" (139)
துணிந்த, மறை மொழியாலே துதிசெய்து (140)
செப்பிய ஆகமவிதியால் ஆமுறையி லர்ச்சனை செய்து [(152)
மன்னிய வாகமப் படியால் மாமுனிவ ரருச்சித்து" 155

என்றெல்லாம் பன்முறையும் கூறுவதைக்காண்க. இந்த இருவரது நிலையையும் ஒன்று சேர்த்து ஒரு பாட்டில் சுட்டுகின்றார்.

"அந்நிலையிலன்பனார் அறிந்தநெறி பூசிப்ப
மன்னியவா கமப்படியான் மாமுனிவர் அருச்சித்து"

என வருதல் காண்க.

இவ்வளவும் கூறியதால் நாம் முன்னர்க் "கண்ணப்பர் அன்பு கங்கு கரையற்ற கடல்; சிவகோசரியார் பக்தி நூலோர் இட்ட வேலிக்குள் அடங்கியது" என்று எழுதியது வலிவடைகின்றது. ஆனால் முடிவாக இருவரும் ஒரு நிலையைத்தான் அடைந்தனர். ஞானமாமுனிவர் பேரறிவாளராய்ப் பேரறிவாகிய பெருமானை அடைந்து பெருமானாயினார். அவ்வறிவு நிலையைக் கண்ணப்பரும் அடைந்தார் என்பார் சேக்கிழார்.

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும்அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீ என்றருள் செய்வார்

என்று சிவபெருமானே எடுத்துக் கூறுமாறு செய்தார் சேக்கிழார். கண்ணப்பரும் பெரும் தவம் செய்தார் என்றும் கூறுகின்றார். முதல்நாள் இரவு இறைவன் எதிரே கண்ணப்பர் நிற்கின்றார். இருள் என்பதில்லை. பாம்பின் மணிகள் ஒளி விடுகின்றன. தீபமரங்கள் நெருப்புப் போல எரிகின்றன. எல்லாவற்றிற்கு மேலே நாயனாரது தெய்வத் திருவொளி பேரொளியாய் விளங்குகின்றது. அந்நிலையிலே நாயனாரை என்ன என்று புகழ்கின்றார் சேக்கிழார். "ஐந்துமாறடக்கி யுள்ளார்" எனச் சிறப்பித்துச் சொல்கின்றார். கண்ணப்பரானவர் ஒருவேளை செய்த வழிபாட்டினாலேயே உரனென்னும் தோட்டியால் ஓரைந்துக் காத்தவராயினார். குணமென்னும் குன்றேறி நின்றார். கணமேயும் வெகுளி இல்லாதவராயினார்.

செந்தழ லொளியிற் பொங்கும் தீபமா மரங்க ளாலும்
மந்திகண் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்துமா றடக்கியுள்ளார் அரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவொன் றில்லை.

முன்னரும் இருள் நீங்குமாறு கண்ணப்பர் நின்றார் என்று கூறினார்.

சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிரு ணீங்க நின்றார்.

என்ற செய்யுளைக் காண்க. அன்பு நிலையில் நிற்பதால் பேரறிஞராதலை முன்னரே விளக்கினோம். ஆதலின் பேரன்பினராய கண்ணப்பர் பேரறிஞராதலில் என்ன வியப்பு? இனி ஐந்துமாறடக்கி யுள்ளார் என்பதற்கு இவ்வாறு பொருள் கூறாது அங்குவாழும் முனிவர்களைக் குறிப்பதாகப் பொருள் கொண்டால் நாம் முன்னம் தன்னந் தனியராக இருந்தனர் என்று சொன்னதோடு முரண்படும். பாட்டும் உப்புச்சப் பில்லாததாய்ப் போய் விடுகின்றது. உயர்நிலை அடைந்தவர்களைச் சுற்றித் தெய்விக ஒளி திகழ்வதைப்பற்றி Sir Arthur Canon Doyle போன்ற மேனாட்டு அறிஞர்களும் கூறுவது காண்க. ஆகவே கண்ணப்பரைச்சுற்றிக் கடவுள் ஒளி ஏன் திகழ்ந்திருத்தல் கூடாது? ஆகவே சிவகோசரியாரது அறிவு நிலையாகிய சிவநிலையைக் கண்ணப்பரும் அடைந்துவிட்டார் என்பதே சிறப்புடைத்தாம்.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.

என்ற திருமூலரே

அறிவு சிவமிரண் டென்பர் அறிவிலார்
அறிவே சிவமாவ தாரும் அறிகிலார்
அறிவே சிவமாவதாரும் அறிந்தபின்
அறிவே சிவமாய் அமர்ந்திருப் பாரே.

என்றும் கூறியதால் அன்புநெறியும் அறிவுநெறியும் இரண்டும் சிவநெறியாகி ஒன்றேயாம் என்பது தெளிவாகின்றது. எனினும் அன்புநெறியில் எளிதில் ஆண்டவனை அடைதல் கூடுமென்பர் பெரியோர்.

அன்பினுள்ளான் புறத்தானுடலாய் உளான்
முன்பினுள்ளான் முனிவர்க்கும் பிரானவன்
அன்பினு ள்ளாகி அமரும் அரும் பொருள்
அன்பினுள்ளார்க்கே அணை துணையாமே.

என்பது திருமந்திரம். இங்குக்கூறிய அன்புநெறி பக்தி மார்க்கம் என்பதின் வேறாய ஞானமார்க்கத்தில் வரும் சுயாநுபவம் என்னும் தன்னுணர்வினை ஒருவாறு குறிக்கின்றதென்பதனை மறுபடியும் வற்புறுத்தவேண்டி இருக்கின்றது. பக்திமார்க்கத்தில் வரும் அநந்ய பக்தியை ஒருவாறு ஒத்து இருக்கிறதென்று வேண்டுமானால் கூறலாம்.

அன்பு நெறியிலும் உண்மையை உள்ளவாறறிதல் திண்ணமாதலின் அன்புநெறி அறிவுநெறியுமாம். ஒரு பொருளைப்பற்றி நன்கு அறிந்துணர்தல் எப்பொழுது இயலுவதாகின்றது? அப்பொருளின்மீது நமது மனம் ஒடிப்பதிந்து அசனுருப் பெற்றபோதே அன்றோ. நமது மனம் வேறு நாட்டமாய் இருந்தால் அப்பொருள் நம் கண்ணைக் குத்தப் புகுவதுபோலக் கண்ணெதிரே மின்னித் திகழ்ந்தாலும் அதனை நாம் அறியப்போவதில்லை. உலகில் பல சிறுவர்கள் மட்டிகள் என்று குட்டுப் படுவது அவர்களது மனநாட்டம் விளையாட்டில் ஒட்டமாய் இருப்பதனால் அன்றோ. அவர்களுக்குக் கல்வி கற்பிப்போர் அவர்களது உள்ளநிலையினை அறியாததால் அவர்களது மனதினைக் கவர்ந்துகொள்ள இயலாது இளஞ் சிறாரைக் கைத்தடிகொண்டு தலையை நொறுக்குகின்றனர். அன்பின் இயல்பினையும் அறிவோடதற்குள்ள தொடர்பினையும் அறிந்திருந்தால் தம்மை நொறுக்கிக்கொண்டு தம்பிள்ளைகளுக்கும் தனிப்பெருஞ் சிறப்பறிவு தந்துதவி இருப்பர். இளங்காளை ஒருவன் இளவேனிற் காலத்தொரு மாலைப்போதில் தென்றல் எதிரே வீசத் தேன் மணங்கமழும் திருமலர் பல பூத்தொளிரும் பகட்டான பச்சைப்பசுஞ் சோலையினுள்ளே பாடிக்கொண்டே போகின்றான். வழி யெல்லாம் மக்களைக் கண்டுகொண்டே செல்கின்றான். அவர்களில் ஒருவரும் அவன் மனதிற் பதிகின்றிலர். அழகிய இளம் பெண்ணொருத்தி வெருண்டெழுந்து ஒடிவளைந்து மின்னலில் இமைக்கும் அழகு நிறைந்த கண்ணொடு பொதுநோக்கு நோக்கி வந்திவனை எதிர்நோக்கு நோக்கி மறைகின்றாள். அவளது அன்னமென ஒல்கி அருகே நடந்த நடையழகும், செவ்விதழ் சிறிது வளைந்தெழ நின்ற புன்முறுவலும், சிறிதே வெளித்தோன்றும் ஒளிபெருகு வெண்பலும், கண்ணாடியென்னக் கவினும் கன்னமும், நிறையழகொடு நேர்நின்று, அளவே நுனிசிறுத்து அடிபெருத்த குமிழ்மூக்கும், கைவல் லோவியன் கருத்தே போல அழகிதாய் வளைந்து ஓடிக் கறுத்த புருவமும், முத்தென அரும்பிய குறுவேர்வையோடு கட்டிற் சிதைந்தெழுந்த சிறு மயிர்கள் அலைந்தசைந்து வீழும் உயர்ந்தகன்ற ஒளியொடு விள்ங்கும் நெற்றியும், வண்டெனக் கறுத்து நெய்ப்பொடு வழவழப்பாய்க் கண்டவர் மனம் சறுக்கி வீழ நீண்ட கூந்தலும், மயிலெனும் சாயலும் வனைந்துடுத்த புடவையும், பொலிவொடு முடித்த பூவும், புனைந்தணிந்த பூணும், உவகை தூண்டிய ஒயிலும், மூச்செறிந்த முழுநிலையும், பெரும் பூவிற்பிலிற்றுந் தேனெனப் பேச்செழுந்த பெருநிலையும், பேச்சடங்கப் பிரிநிலையில் கண்டு களிக்கும் பின்னழகும், பன்னீரின் நன்மலர்போல் நறுமணம் கொண்டு சிறுகச்சிவந்து பாலாவிபோல மெல்லிதாய் விளங்கும் பட்டாடையினுள்ளே அவ்வாடைக் கழகுசெய்து வெளித்தோன்றும் அவ்வுயிரோவியத்தின் உவகை மின்னும் உறுப்புக்களின் மயலெழுப்பி மனதைப் பிடிக்கும் வடிவமும், அனைத்தும் அவனது மனத்தே அங்ஙனம் இருந்தவாறே பதிகின்றன. அவற்றை ஆண்டுபல கழிந்தும் அவன் தன் கனவிற் கண்டு காதல்வெறி கொண்டு கலங்கி நிற்கின்றான். இரண்டொரு இமைப்போது கண்ட இப்பெண்ணின் எழிலெல்லாம் இவன் மனதிற்றோன்ற ஒவ்வொரு நாளும் கண்டு பழகிய தனது வீட்டாரது வடிவ வேறுபாட்டை எடுத்துச்சொல்ல இயலாதவனாக இருக்கின்றான். இவ்வேற்றுமை எதனாலாயது. வேறிடத்தில் கண்டவை கேட்டவை கண்ணளவாய்க் காதளவாய் மனக்கரையிலேயே நின்றுவிட்டன. வெறும் அவாவும் ஆர்வமுமே உள்ளதாம் உள்ள நிலையிலேயே இவ்வியக்கத்தகும் அறிவு காணப்படுமாயின் அன்பு நிலையின் அறிவு பேரறிவாய்ப் பேரொளியாய் நிற்கக் சேட்பானேன். அன்பு நிலையில் உலகமே நாமாதலின் உலக முழுதினையும் உயிர் முழுதினையும் உயிர்க்குள் ளூறும் உலக முதல்வனையும் உள்ளபடி அறிந்து உள்ளூறை இன்பம் கொண்டு மகிழ்கின்றோம். அன்பு நிலையில் ஐயமும் இல்லை, திரிபும் இல்லை. உள்ளதை உள்ளவாறறிகின்றோம். சினமும் சோர்வும் முதலான தடைகள் இல்லாதபோது தனிப்பேரறிவு தழலெனத் திகழ்கின்றது. ஒருவனது அன்பு உலகமுழுதும் ஓங்கி உயர்ந்து அகன்று ஆழ்ந்தபோது, அவன் அறிவும் நீண்டு எழுந்து சுற்றுமுற்றிலும் பாவி ஒன்றே யாகின்றது. அதனாலன்றோ அன்புநெறி அறிவுநெறியும் ஆவது. எனவே அன்புநெறி நின்றார் இன்பமே ஆகின்றனர், அறிவே ஆகின்றனர். உண்மையே ஆகின்றனர். ஆகவே, சிவமேயாகத் திகழ்கின்றனர். இதுபற்றி யன்றோ அன்புநெறி சிவநெறி எனச் சிறப்பித்துப் புகழப்படுகின்றது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனும். டெலிபோன் நெ. 3311.

தேவாரமும் ஐந்திணையும்.

(747-ம் பக்கத் தொடர்ச்சி)

2. திணைகளின் மூவகைப் பொருள்

(XI) செய்தி—ஒவ்வொருதிணையில் சாதாரணமாய்ப் பிரதிதினம் நடக்கும் சங்கதி யெதுவோ, அதைச் செய்தியென்பர். அதாவது அந்நில மாந்தர்கள் அவரது குடியிடங்களில் எதைப்பற்றிப் பேசுவார்கள் என்பது. பாலை நிலக்கள்வர் கொள்ளையடிப்பதைப் பற்றிப் பேசுவார்கள். பொருள் இழந்தவர்கள், சூறைகொள்ளப்பட்டு வருந்தியதை மொழிவர். நெய்தல் நிலத்தில் மீன் பிடிக்கும் செய்தி நிகழும். நமது சமய குரவர் அவ்வத்திணைகளிற் பாடு மிடத்து மிகவும் அழகாக அத்திணை மாந்தர் மொழிவதுபோல், மிகவன்பாய்ப் பாடுவனவற்றைக் காண்க:—

(i) குறிஞ்சி :—இத்திணையின் செய்தி, தேனழித்தல், கிழங்கு அகழ்தல், தினைவிளைத்தலுமாம். தேனழித்தல் தாம் வளர்க்கும் மிருகங்களுக் கென்றால், தேன் எவ்வளவு மலிவென்பதை அநுமானிக்கலாம். கிழங்கு அகழ்தல் குறிஞ்சியில்

போர்மலி திண்சிலைகொண்டு பூத கணம்புடை சூழப்
பார்மலி வேடுவ ராகிப் பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல்கி ளைத்த வின்னொளி மாமணி யெங்கும்
கார்மலி வேடர் குவிக்கும் கற்குடி மாமலை யாரே!
—சம்பந்தர்.

என்றபடி பன்றிகள் குறவர்களைக் காட்டிலும் மிகவும் அழகாகச் செய்யும். பஞ்சநாளில் மனிதர் (அப்பர்—தனித்திருவிருத்தம், 10-வது பாசுரத்தைக் காண்க.) குன்றுகளை யடைந்து அவ்விடத்திய கிழங்குகளால் உயிர்வாழ்வார். இவை தேவாரப் பாசுரங்களிற்காண்க:—

மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறமேவரு
மினங்கள்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட
மலங்கித் தனகளிற்றை
அழைத்தோடியும் பிளிறீயவை
யலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தன் பிடிதேடிடுஞ்
சீபர்ப்பத மலையே. —சுந்தரர்.

ஆனைக்குல மிரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரியத்
தானப்பிடி செவிதாழ்ந்திட வதற்குமிக விரங்கி
மானக்குற வடல்வேடர்க ளிலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடும் சீபர்ப்பத மலையே.
—சுந்தரர்.

மானிடமார்தரு கையர் மாமழு வாரும்வ லத்தார்
ஊனிடை யார்தலை யோட்டி லுண்கல னாகவு கந்தார்
தேனிடையார் தருசந்தின் றிண்சிறையாற் றினைவித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி மாமலையாமே.
—சம்பந்தர்.

(ii) முல்லை—இத்திணையின் செய்தி நிரைமேய்த்தல் முக்கியமானதாம். ஏனெனில் இந்நிலத்தோர் ஆயர்களுக்கு இது குலத்தொழிலாகும். இதன்றியும் மருதநில வாசிகள்போல் களைகட்டலும், கடாவிடுதலும் இவர் செய்தலுமுண்டு. ஆகையால் களைகட்டல், கடாவிடுதலும் இந்நிலத்திற்கு உரியதென்பர் :—

விளைதரு வயலுள் வெயில் செறிபவள
மேதிகள் மேய் புலத் திடறி
யொளிதர மல்கு மோமாம் புலியூ
ருடையவர் வடதளி யானைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக்
காழியுண் ஞானசம் பந்த
னளிதரு பாடல் பத்தும்வல் லார்க
ளமரலோ கத்திருக்கும். —சம்பந்தர்.

ஏடேறு மலர்க்கமலத் தயனு மாலு
மிந்திரனும் பணிந்தேத்த விருக்கின் றான்
தோடேறு மலர்க்கடுகை வன்னி மத்தந் [காண்
துன்னியசெஞ் சடையான்காண் டுகடீர் சங்க
மாடேறி முத்தீனுங் கானல் வேலி
மறைக்காட்டு மாமணிகாண் வளங்கோ ளேணி
சேடேறி மடுப்படியுந் திருப்புத் தூரிற் [மேதி
றிருத்தளியாண் காணவனென் சிந்தை
—அப்பர். [யானே.

விடையரவக் கொடியேந்தும் விண்ணவர்தங் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானு
மடியிணையுந் திருமுடியு காணவரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்க
ளுடையவிழக் குழலவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்கரைந்திவளு கொள்ளிடத்தின் கரைமேற்
கடைகள்விடு வார்துவளைக் களைவாருங் கழனிக்
காளுட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.
—சுந்தரர்.

(iii) பாலை :—இத்திணையின் செய்தி ஆறலைத்தலும் சூறைகோடலுமேயாம் :—

எங்கேனும் போகினு மெம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினுங்கூறைகொண் டாறலைப்பாரிலை
பொங்கா டரவா! புக்கொளி யூரவி நாசியே!
எங்கோனே! யுனைவேண்டிக் கொள்வேன்பிறவாமையே.
—சுந்தரர்.

பீறற்கூறை யுடுத்தொர் பத்திரங்
கட்டி வெட்டனராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாடொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ்
முருகன்பூண்டி மாநகர்வாய்
ஏறுகா லிற்றதில் லையாய்விடி
லெத்துக் கிங்கிருந்தீரெம் பிரானிரே?
—சுந்தரர்.

(IV) மருதம்:—இதன் செய்தி, நடுதல், களைகட்டல், அரிதல், கடாவிடுதல் முதலியன :—

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர் கோமான்
மிடல்வந்த விருபதுதோள் நெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங் கோயில்
நடவந்த வுழவரிது கடவோனு
வகைபாலாய்த் தொன்று துன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்கும் கழுமலமே. —சம்பந்தர்.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ் சதுரர் பெயலர்க்கும் பீடார்
தோழமையளித்த பெருமான் கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகப்ப
வதுகுடித்துக் களித்து வாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே. —சம்பந்தர்.

பொன்னியல் பொருப்பரையன்
மங்கையொரு பங்கர் புனறங்கு சடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்துறைவிடம்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள
வள்ளைபட ரள்ளல் வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை
சேருதவி மாணி குழியே —சம்பந்தர்.

(v) நெய்தல் :—இந்நிலத்தின் செய்தி, மீன்படுத்தல், உப்புவிளைத்தல், அவைவிற்றலுமாம்:—

சங்கைப்பட நினையாதெழு
நெஞ்சே! தொழு தேத்தக்
கங்கைச்சடை முடியுடையவர்க்
கிடமாவது பாவை
அங்கக் கட லருமாமணி
யுந்திக் கரைக் கேற்ற
வங்கத்தொடு சுறவங் கொணர்ந்
தேற்றும் மறைக் காடே.
—சுந்தரர்.

மாலைமதி வாளரவு கொன்றை மலர்
துன்றுசடை நின்று சுழலக்
காலையி லெழுந்தகதிர் தாரகை
மடங்கவன லாடு மானார்
சோலையின் மரங்கடொறு மிண்டியின
வண்டுமது வுண்டி சைசெய
வேலையொலி சங்குதிரை வாங்கசுற
வங்கொணரும் வேத வனமே.
—சம்பந்தர்.

மூக்கிமுன் வெகுண்டெ டுத்த
முடியுடை யரக்கர் கோனை
நக்கிருந் தூன்றிச் சென்னி
நாண்மதி வைத்த வெந்தை
அக்கர வாமை பூண்ட
வழகனூர் கருத்தி னாலே
தேக்குநீர்த் திரைகண் மோதுந்
திருமறைக் காடனாரே.
—அப்பர்.

நீறுதிரு மேனியின் மிசைத்தொளி
பெறத் தடவி வந்திடபமே
ஏறியுல கங்கடொறும் பிச்சைநுக
ரிச்சைய ரிருந்த பதியாம்
ஊறுபோ நளின்றமி ழியற் கிளவி
தேரு மடமாதருடனார்
வேறு திசை யாடவர்கள் கூறவிசை
தேருமெழில் வேத வனமே
—சம்பந்தர்.

…"வீசுவலை வாணரவ வாரிவலை பேசுமெழில்
வேதவனமே'' —சம்பந்தர்.

இதுகாறும் கருப்பொருள்கள் யாவும் விடாது* மொழியவில்லை. ஐந்திணைக்குப் பறை வேறுபாடு, யாழ் வேறுபாடுள. அவற்றின் ஆராய்ச்சி புலவோர் செய்க. இது தனி யாராய்ச்சியாகவேண்டு மென்றும், "பறையும் யாழும்" என்னும் வியாசம் தனியே வரவேண்டு மென்றும் எண்ணி அப்பொருள்களைப் பற்றி யாதொன்றும் கூறாது கருப்பொருள் விவரத்தை இத்துடன் நிறுத்தலாயிற்று. இனி ஐந்திணைப் பொருள்களில் மூன்றும் பகுதியாகிய உரிப்பொருளை யாராய்வோம்:—

* தெய்வ, முணவே, மா, மரம், புள், பறை
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
யவ்வகை பிறவுங் கருவென மொழிப
—தொல்காப்பியம்.

3. உரிப்பொருள்

" புணர்தல் பிரிதலிருத்த லிரங்க
லூட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே''

என்றார் தொல்காப்பியனார். இதற்கு நச்சினார்க்கினியர் "தேருங் காலை என்றதனாற் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும், பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும், அவ்வந்நிமித்தங்களும் உரித்தென்று ஆராய்ந் துணர்க' என்றனர். மற்றும், தொல்காப்பியனார், மேற்கண்ட சூத்திரத்தில் புணர்தலுக்குப்பின் பிரிதலும், பிரிதலுக்குப்பின் இருத்தலும், இருத்தலின்பின் இரங்கலும், இரங்கலுக்குப்பின் ஊடலும் முறையே கூறிய காரணம் யாது என்பதற்கு நச்சினார்க்கினியர் கீழ்வருமாறு கூறுகின்றார்:—

" அகப்பொருளாவது புணர்ச்சி யாகலானும் அஃது இருவர்க்கும் ஒப்பநிகழ்தலானும் புணர்ச்சியை முற்கூறிப் புணர்ந்துழி யல்லது பிரிவின்மையானும் அது தலைவன் கண்ணதாகிய சிறப்பானுந் தலைவி பிரிவிற்குப் புலனெறி வழக்கின்மையானும் பிரிவினை அதன்பிற் கூறிப் பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பிற் கூறி, அங்ஙனம் ஆற்றியிராது தலைவனேவலிற் சிறிது வேறுபட்டிருந்து இரங்கல், பெரும்பான்மை தலைமகளதேயாதலின், அவ்விரங்கற் பொருளை அதன்பின் கூறி, இந்நான்கு பொருட்கும் பொதுவாதலானுங் காமத்திற்குச் சிறத்தலானும் ஊடலை அதன் பிற்கூறி இங்ஙனம் முறைப்படுத்தினார்."

இவ்வுரிப்பொருள்கள் உதாரணங்கள் காட்டும் வகையில் சங்க நூற்களினின்று மேற்கோள் தருவதில் மேற்படிப் பொருள்களை இவ்வுரையாசிரியர் வெகு அழகாய்ச் சிற்றின்ப வாயிலாய்க் காட்டுகின்றனர். தேவாரத்திலோ இப்பொருள்கள் உருவகமாய்ப் பேரின்ப நிலைகளைக் காட்டும். ஆகையால் இவ்வைந்திணை யுரிப் பொருள்களை நமது சமயகுரவர் காட்டுவதைக் கண்டு களிப்போம் :—

உரிப்பொருள்களைப் பற்றித் தனி வியாசம் பின்னே வருமாதலால் அவை பெறும்தலையங்கத் தொகுதிகளையே இப்பாகத்தில் குறிக்கப்பட்டன.

(i) குறிஞ்சி :—" நான்கு நிலத்தினும் புணர்ச்சி நிகழுமேனும், முற்பட்ட புணர்ச்சியே புணர்தற் சிறப்புடைமையிற் குறிஞ்சி '' என்பர் நச்சினார்க்கினியர். எனவே இத்திணையின் உரிப்பொருள்கள் புணர்தலும், புணர்தலின் நிமித்தமுமேயாம் :—

இனதளவி லிவனதடி யிணையுமுடி யறிதுமென
விகலு மிருவர்
தனதுருவ மறிவரிய சகலசிவன் மேவுமலை
தன்னை வினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரு
மணம் புணருநாள்
கனகமென மலர்களணி வேங்கைக ணிலாவுகா
னத்தி மலையே. —சம்பந்தர்.

(i) முல்லை :— இத்திணையின் உரிப்பொருள்கள், இருத்தலும் இருத்தலின் நிமித்தமுமாம். "தலைவி, பிரிவுணர்த்தியவழிப் பிரியா ரென்றிருத்தலும், பிரிந்துழிக் குறித்த பருவமன்றென்று தானே கூறுதலும், பருவம் வருந்துணை ஆற்றியிருந்தமை……போல்வன இருத்தல். " பருவங்கண்டு ஆற்றாது தோழி கூறுவனவும் பருவமன்றென்று வற்புறுத்தினவும், வருவரென்று வற்புறுத்தினவும் . …அவைபோல்வனவும் நிமித்தமாதலில், இருத்தல் நிமித்தமெனப்படும்'' தேவாரத்தில் இவற்றைப்பிணைப்பதைக் காண்க:—

கோளரவு கொன்றைநகு வெண்டலை யெருக்குவணி
கொக்கிற கொடும்
வாளரவு வண்சல மகட்குலவு செஞ்சடை
வரத்தி றைவனூர்
வேளரவு கொங்கையிள மங்கையர்கள் குங்குமம்
விரைக்கு மணமார்
தேளரவு தென்றறெரு வெங்குநிறை வொன்றிவரு
தேவூ ரதுவே —சம்பந்தர்.

(iii) பாலை : —இத்திணையின் உரிப்பொருள், பிரிதலும் பிரிதலின் நிமித்தமுமாம் :—

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பாந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே ?
— அப்பர்.

(iv) நெய்தல்: —இத்திணையின் உரிப்பொருள் இரங்கலும், இரங்கலின் நிமித்தமுமாம். " கடலுங் கானலுங் கழியுங் காண்டொறும், இரங்கலும், தலைவன் எதிர்பட்டு நீங்கிய வழி இரங்கலும், பொழுதும் புணர்துணைப் புள்ளுங் கண்டு இரங்கலும் போல்வன இரங்கல். அக் கடல் முதலியனவுந் தலைவன் நீங்குவனவு மெல்லாம் நிமித்தமாம்:—

வரங்கள் வண்புகழ் மன்னிய வெந்தை மருவார்
புரங்கண் மூன்றும் பொடிபட வெய்தவன் கோயி
லிரங்க லோசையு மீட்டிய சரக்கொடு மீண்டி
தரங்க நீள்கழித் தண்கரைவைகு சாய்க்காடே
—சம்பந்தர்.

துணையார முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்!
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார விருவிசிம்பிற் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பனென் னெழினலமுண் டிகழ்வானோ?
— அப்பர்.

(v) மருதம் இதன் உரிப்பொருள் ஊடலும், ஊடலினிமித்தமுமாம். புலவி முதலியன ஊடலாம். பரத்தையும் பாணனும் முதலியோர் ஊடனிமித்தமாம். சம்பந்தர் மனமென்னும் பின்புத்தி ஸ்வரூபத்தை நோக்கிக் கூறுவது காண்க: —

ஊடினா லினியாவ தென்னுயர்
நெஞ்சமே! யுறுவல்வினைக்
கோடி நீயுழல்கின்ற தென்னழலன்று
தன்கையி லேந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான்
பிரமாபுரத்துறை வேதிய
னேடுநேர்மதி யோடராவணி
யெந்தை யென்றுநின் றேத்திடே.
—சம்பந்தர்.

இவ் உரிப்பொருள்கள் திணைமயக்கம் பெறுக் கைக்கிளை பெருந்திணை தேவாரத்தின் காண்பன பின்னொரு வியாசத்தில்வரும்.

'' உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே.''
—தொல்— பொருள். 13.

(முற்றிற்று).

E. N. தணிகாசலமுதலியார்.

சூர்ப்பநகை.

வனவாசத்திற்கு வந்த இராமனும் அகத்தியமுனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு கோதாவரி நதிக்கரையிலிருக்கும் பஞ்சவடியில் இலக்குமணனாற் கட்டப்பட்ட பர்ணசாலையி லிருந்து வந்தான். இராமன் பத்துவருடம் வனத்தில் வந்தும் "ராவணாரி'' என்ற பெயர்பெறக் காரண மேற்படவில்லை. சூர்ப்பநகை வந்து பார்த்தபிறகுதான் ஏற்படுகிறது. சூர்ப்பநகை இராமனை வந்து கண்டு தான் கொண்ட பழம் பகையை முடிக்கச் செய்த செய்கைக ளெவ்வாறெனப் பார்ப்போம்.

சூர்ப்பநகை பஞ்சவடியிலிருக்கும் இராமனை வந்து கண்டாள். அவனது வடிவழகை யுற்று நோக்கினாள். காமனோ, இந்திரனோ, பிரமனோ வென்று ஐயுற்றாள். எரிந்த மன்மதன் மீண்டும் தவஞ்செய்து இவ்வுருப் பெற்று வந்தவனுவனென்று துணிந்தாள். இங்ஙனஞ் சூர்ப்பநகை யோர்ந்து இராமனின் கை, தோள், கண், மார்பு, முகம் முதலிய உறுப்புகளி னழகி லீடுபட்டு ;

" நவன் செயத்தகைய விந்தளின நாட்டத்தான்
தவன் செயத் தவன்செய்த தவன் ''

என்ன என்று கூறினள். இவ்வாறு சூர்ப்பநகையின் ஆசை கொண்ட மனதை இராமனுடைய உறுப்புக்களும் பிறவும் தம் வயமாக்கிக் கொண்டன. ஆதலால் விட்டு நீங்கவியலாத சூர்ப்பநகை ஏகபத்தி விருதங்கொண்ட இராமனைச் சேர்ந்தின்புற வேண்டுமென் றெண்ணினள்.

" காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல்
மாட்சிமை நான்கு வகைத்தே கைக்கிளை''

என்ற கைக்கிளை விதிப்படி பெண்பாற் கைக்கிளை புனைந்த கம்ப நாடர், சூர்ப்பநகையி னெண்ணம் நிறைவுடையா தென்ப தறிவிக்கும் பொருட்டு, முதன் மூன்றையு முறையே கூறிப் பிறகு இராமன் குறிப்பையறியாது சூர்ப்பநகை அவனைச்சேர்ந்து இன்புற வெண்ணினளென் றமைத்த நுண்பொருட் சீர்மை யறிந் தின்புறத் தக்கது.

உடனே சூர்ப்பநகை தன் வன்னுருவத்தையும் இராம னின்னுருவத்தையுஞ் சீர்தூக்கி யெண்ணினள். யானிவ் வுருவோடு அவ் வழகன்முன் சென்றேனுயின் அவன்;

"எயிறுடை யரக்கி எவ்வுயிரு மிட்டதோர்
வயிறுடையா ளெனமறுக்கும்''

என்றெண்ணி இலக்குமி தேவியை நினைத்தாள். அவ்வளவில் அவள் இலக்குமியை ஒத்த அழகுடையவளாய் ஒப்பற்ற அவயவங்களோடு

" கானினுயர் கற்பகமு யிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென ''

இராமனை நோக்கிக் குறுநடை நடந்து நகைகுலுங்க வந்தாள். இவள் பூண்டிருக்கும் சிலம்பு, மேகலை முதலிய அணிகளின் ஓசையும், கூந்தலிற் சூடிய மலர்களில் மொய்க்கும் வண்டுகளி னார்ப்பும் ஒன்றுசேர்ந்து ஓர் பெண்மணி வருகையைக் குறித்தன. அவ்வோசை

வருந் திசையை இராமனு மிசைய நோக்கினான். கண்ணிமைக்குந் தேசுடைய மின்னற் கொடிபோன்ற ஓர் பெண்மணி அன்னநடையால் வருவதைக் கண்டான். மூவுலகத்து மில்லாத அழகுடைய பெண்ணைக்கண்டு

"ஆருழை யடங்கும் அழகினுக் கவதியுண்டோ"

என்று எண்ணினான்.

அவ்வளவில் சூர்ப்பநகையும் இராமன் பக்கல்வந்து அவனது திருமுக மண்டலத்தைத் தன் மனதில் நினைந்தூன்றிப் பதித்துக் கைகுவித்து இறைஞ்சிக் காதற் பார்வையால் ஒருதடவை அவனைப் பார்த்துப் பிறகு அயல்நோக்கி ஒதுங்கி நாணி நின்றாள். அதுகண்ட விராமன் "திருவே நின்வரவு தீதில் வரவாருக" வென்று ஆசிகூறி "நீ இங்குவரக் காரணமென்ன? உன் ஊர், பெயர், உறவினர் முதலிய விவரங்களென்ன" வென்று கேட்டான். அதற்குச் சூர்ப்பநகை நகைத்துத் தன் ஊர், பிறப்பு முதலிய வரலாறுகளை விவரித்துத் தான் இராவணன் தங்கையென்றும் தன் பெயர் காமவல்லி யென்றுங் கூறினாள்.

இதுகேட்ட இராமன் 'இவள் செய்கை நன்றன்று; ஆயினு மறிவோ' மென்றெண்ணி யவளைநோக்கி 'நீ மெய்மையில் இராவணன் தங்கையாயின் இவ்வழகிய உருவமுனக் கெங்ஙன மமைந்த' தென்று வினவினான். அதற்கவளும்;

"மாயவல் லரக்க ரோடு வாழ்வினை மதிக்க லாதேன்
ஆய்வுறு மனத்தே னாகி யறந்தலை நிற்ப தானேன்
தீயவை தீய நோற்றுத் தேவரிற் பெற்றது"

என்று பதிற் கூறினாள். அங்ஙனமாயின், நீ "செல்வமுந் துணையுமின்றித் தனியேவரக் காரணமென்னையோ" வென்றிராமன் கேட்க "இறைவ! யான் சிறப்பிலார் மாட்டுச் சேரேன்; தேவர்பாலும் ஆரிய முனிவர்பாலுஞ் சென்றனன்; தவிர இங்கோர் காரிய முண்டாதலா லது காரணம் வந்தேன்," என்றாள்.

ஐயனு மதனைக்கேட்டுப் "பெண்பாலாரின் மனவெண்ணத்தை எளிதிலறிய முடியாது, மேலும் இவள் வருகை நன்னெறி பற்றியதுமன்று. எல்லாம் பிறகறியலாகுமென வெண்ணித் "தோளீ! என்பா லென்ன காரிய முளதென்று சொல், கூடுமாயின் செய்வேனென்றான். இவ்வாறு கூறிய பிறகுதான் சூர்ப்பநகை தன்னுள்ளக் கிடக்கையைக் கூறலுற்றாள். இதுகாறும் சூர்ப்பநகையின் கூற்றும் நடையுடை பாவனையும் இராமனுக்கு ஐயம் விளைவித்தன. அவ்வையத்தை இதன்பிறகுதான் தவிர்ந்தான். சூர்ப்பநகை கூறியதாவது:—

"தாமுறு காமத் தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
தாமென லாவ தன்றால் அருந்தவ மகளிர்க் கம்மா
வேமுறு முயிர்க்கு நோவேன் என்செய்கேன் யாரு [மில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி."

என்று கூறியதுமன்றிக் கண்களாலும் இங்கிதக் குறிப்புங் காட்டி நின்றாள்.

இராமன் இவைகளை முறையே கேட்டு, அவளது நடையுடை பாவனைகளைக் கண்டு, இவள் வெட்கமற்றவள், நல்லளுமில்லை யென்றெண்ணி மறுமொழி புகலாதிருந்தான். இதைக் கண்டவள் இராமனது தன்மையைக் காணாது 'இவர் நம்பால், ஆசை கொண்டோ? அல்லது வெறுப்புக் கொண்டோ? உரையாடா திருக்கின்றார், அதை அறிய வேண்டுமென்று 'எழுதரு மேனியாய்! நீ இங்கு எழுந்தருளியதை யானறியவில்லை; முனிவர்க்கு ஏவல் செய்து அழகையும் இளமையையும் பயனின்றிப் போக்கினேன் என்றனள். அதற்கிராமன் "சுந்தரீ! இது எம் மரபின் பழக்கமல்ல, தவிர நீ அந்தணர் பாவை, யானோ அரசர்குல மகன்" என்று கூறினான். பிறகு பொய்நின்ற நெஞ்சிற் கொடியாள்! "என் தந்தை அந்தணன், தாய் அரக்கியாவள்; என்னை இகழத்தக்க காரண மிதுவேயாயின் என்னுயிர் போய்விடு மென்றாள்.

உடனே இராமன் நகைத்து "நீ இராக்கத கணம்; யானோ தேவகணம்; இவ்விரு கணமும் ஒன்று சேராதென்று அறிஞர் கூறினரே? அதற்கென் செய்வ" தென்று கூறவும் தானவ்வாறு கூறியது குற்றமென்றுணர்ந்த சூர்ப்பநகை "அறிவ, யான் தேவரை வழிபட்டு அப்பழிப்பிறவியைத் தீர்த்துக்கொண்டேன்" என்றாள் அதற்கறிவன் "உன்னுடன் பிறந்தவரான இராவணனும் குபேரனும் ஒன்றுசேர்ந்து உன்னைக் கொடுப்பாராயின் யானேற்றுக் கொள்வன், அன்றெனில் உன்னிடம் தனியாகப் பேசவு மஞ்சுகின்றேன்" என்று மறுதலுக் கூறிவிட்டான்.

பின் சூர்ப்பநகை "தோளினாய்! காந்தர்வ மணமென்பது தலைவனும் தலைவியும் அன்பினாற் கலந்தனுபவிக்கு மின்பமென்று வேதங் கூறுகின்றதே! இது முடிந்தால் என் சகோதரருக்கும் விருப்பமாகும். தவிர, என் முன்னோனுக்கு முனிவருடன் முற்றிய பகையுண்டு; நீவிர் தனியாக இங்கு வந்திருக்கின்றீர்கள்; அவருடன் உறவு செய்துகொள்வதற்குத் தக்க சமய மிதுதவிர வேறில்லை. அவர்கள் விண்ணுலகத்தையும் உமது ஆளுகையாக்கி யுமக் கேவலுஞ் செய்வார்களென்றாள்.

இதைக்கேட்டதும் வரிசிலை வடித்த தோளனாகிய இராமன் சூர்ப்பநகை சாம தான பேத உபாயங்கள் கூறியதைக்கேட்டு;

"நிருதர்த மருளும் பெற்றேன்;
நின்னலம் பெற்றேன்; நின்னோடு
ஒருவரும் செல்வத்தி யாண்டும்
உறையவும் பெற்றேன்; ஒன்றோ!
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்தது."

என்றெண்ணிச் சிரித்தான்.

(தொடரும்) R. முத்தையர்.

மதிப்புரை.

ச. தா. மூர்த்தி முதலியார். இயற்றிய பல நூல்கள்.

இரங்கூனில் பலவாண்டுகளாகப் புத்தக வியாபாரஞ் செய்து நற்பேரெடுத்துள்ள நவீனகதா புத்தகச்சாலையார், ச. தா. மூர்த்தி முதலியார் இயற்றியுள்ள சிறு புத்தகங்களிற் பதினைந்து எமது பார்வைக்கு அனுப்பித் தந்துள்ளார். அவைகளின் பேரையும் விலையையும் இவ்விதழ்களில் வருகின்ற அவர்களது விளம்பரத்தில் காணலாம். அவைகளல்லாமல் 4 அணா விலையுள்ள 'நீதி மாலிகை' என்னுமொரு புத்தகமும் எமக்கனுப்பப்பெற்றிருக்கின்றது.

இப்புத்தகங்கள் யாவும் எளிய நடையில் அழகிய சொற்களைக்கொண்டு நீதி தருமம் ஒழுக்கம் முதலிய சிறந்த விடயங்களைப்பற்றி உபந்யாசவாயிலாய் எழுதியுள்ள நூல்களாம். தமிழ்க் காவியங்களிலிருந்து அங்கங்கு ஆசிரியர் எடுத்தாள்கின்ற கதைகளும் பாசுரங்களும் படிப்போரைத் தமிழின்பால் பழக்கஞ் செய்துவிக்கும் தன்மையன. இப்புத்தகங்களைப் படிக்கும் தமிழறிஞர் இன்பமும் பயனும் எய்துவாராக. எல்லாப் புத்தகங்களையும் வாங்குவோருக்கு விலையில் சிறிது சகாயமுண்டு.

தமிழ்ப் பாடம் 39.

நள வெண்பா

(751-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்

எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலில்
பற்றிப் பவளம் படர் நிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா னாடையாற் போந்து. 82.

பதப்பிரிவு:—எற்றி திரை பொர நொந்து ஏறி இள மணலில் பற்றி பவளம் படர் நிழல் கீழ் முத்து ஈன்று வெள் வளை தாய் ஓடும் நீர் வேலை திரு நாடன் புள் வளைத்தான் ஆடையால் போந்து.

அன்வயம்:—வெள் தாய்வளை: திரை எற்றிப் பொர, வருந்தி, பவளம்பற்றி இளமணலில் ஏறி, படர்நிழல்கீழ் முத்து ஈன்று, ஓடும், நீர்வேலைத் திருநாடன் போந்து, ஆடையால் புள் வளைத்தான்.

பதவுரை.

வெள் - வெண்மையான
தாய்வளை - தாய்ச்சங்குகள்,
திரை - அலைகள்
எற்றி - தள்ளி
பொர - மோதுவதால்,
நொந்து - (அவை) வருந்தி,
பவளம் - பவளக்கொடிகளை
பற்றி - பிடித்துக்கொண்டு
இள - மெல்லிய
மணலில் - மணலுள்ள கரையில்
ஏறி - ஏறி,
படர் - (அப்பவளம்) படர்கின்ற
நிழல் - நிழலின்
கீழ் - கீழே
முத்து - (தாம் கருக்கொண்டிருந்த) முத்துக்களை
ஈன்று - பெற்றுவிட்டு
ஓடும் - ஓடிப்போகும்
நீர் - நீர்வளமிகுந்த
வேலை - கடலைச்சார்ந்த
திரு - அழகிய
நாடன் - நாட்டையுடைய நளன்,
போந்து - போய்
ஆடையால் - ஆணியினால்
புள் - அப்பறவையை
வளைத்தான் - சூழ்ந்துகொண்டான்.

விசேஷவுரை:—தமயந்தி பிடிக்கச்சொன்ன அழகுபோலிருக்கின்றது நளன் அப்பறவையைப் பிடிக்கப்போனதும். நிடதநாட்டு அரசனுக்குரிய செல்வம் எல்லாம் பெற்றிருந்த இவன் அவைகளை இழந்து மக்களையும் பிரிந்து இப்பொழுது காட்டில் தன்மனைவி சொற்கேட்டு அவள்வைத்து விளையாடுதற்கு ஒற்றைத் துகில்கட்டிப் புள்வேட்டை ஆடிக்கொண்டிருந்த காட்சி காணத்தக்கதே.

இவ்வாறு செய்கின்ற நளனை, நம் கவி அவனுடைய நாட்டின் தன்மையைக் கூறிக் குறிக்கின்றார். கடலின் அலையால் மோதுண்ட சங்குகள் கரையிலேறித் தாம் வைத்துப் போற்றிய முத்துக்களை ஈன்று துறந்து போகின்ற நாட்டையுடைய நளன், என்பதில் ஏதோ உள்ளுறையுவமம் அடங்கியிருப்பதுபோல் தோன்றுகின்றது. உள்ளுறை உவமம் இன்னதென்பதை முன் 84-வது செய்யுளின்கீழ் (331-வது பக்கம்) காட்டியிருக்கின்றோம். இங்கு இந்தச் செய்யுளில் இருக்கின்ற உள்ளுறை உவமம் எதுவென்று நிச்சயமாகத் தெரியவில்லை. கடலின் அலைகளால் எற்றுண்ட சங்குகள் தம்முடைய செல்வமாகிய முத்தைத் துறந்து போவதேபோல் நளன் விதியால் மோதுண்டு தன்னுடைய செல்வங்களையெல்லாம் துறந்து போந்தவன், என்ற நாட்டின் தன்மையை அவன்மேல் ஏற்றிப் புகழேந்திப் புலவர் குறிப்பித்திருப்பினும் இருக்கலாம்.

கூந்த லிளங்குயிலுங் கோமானுங் கொண்டணைந்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று—வேந்த
நன்னாடு தோற்பித்தா னானோகா ணென்றதே [னே
பொன்னாடு மாநிறத்த புள். 83.

கருத்து:—புள்ளுருவாகத் தோன்றிய கலியின்மீது நளனும் தமயந்தியும் துணியைக் கொண்டுபோய்ப் போர்த்தியவுடன் அவன் துணியோடு பறந்தேறி ஆகாயத்தில் நின்று, "வேந்தனே, உன் துணியை இப்பொழுது வஞ்சனையால் கவர்ந்த நானேதான் முன் உன்னுடைய நாட்டை நீ தோற்கும்படி செய்தவனும் ஆயினேன்," என்றான்.

காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்
காவிபோ லாடையுமொன் றானதே—பூவிரியக் [கும்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது. 84

பதப்பிரிவு:—காவிபோல் கண்ணிக்கும் கண்ணி அம் தோள் காளைக்கும் ஆவிபோல் ஆடையும் ஒன்று ஆனது ஏ பூ விரிய கள் வேட்டு வண்டு உழலும் கானத்து இடை கனகம் புள்வேட்டை ஆதரித்தபோது.

அன்வயம்:—பூவிரியக் கள்வேட்டு வண்டு உழலும் கானத்து இடைக் கனகப் புள்வேட்டை ஆதரித்த போது, காவிபோல் கண்ணிக்கும் கண்ணி அம்தோள்கும் ஆவிபோல் ஆடையும் ஒன்று ஆனதே.

பதவுரை.

பூ - மலர்கள்
விரிய - மலர்வதால் வரும்
கள் - தேனை
வேட்டு - விரும்பி
வண்டு - வண்டுகள் (தேன்கிடைக்காமையால்)
உழலும் - திரிகின்ற
கானத்துஇடை - பாலைவனத்தில், (அவர்கள்)
புள் - பறவையைப் பிடிக்கும்
வேட்டை - வேட்டையை
ஆதரித்த - விரும்பின
போது - சமயத்தில்,
காவிபோல் - நீலோற்பலம் போல்கின்ற
கண்ணிக்கும் - கண்களையுடைய தமயந்திக்கும்
கண்ணி - பூமாலையை அணிந்த
அம் - அழகிய

தோள் - தோள்களையுடைய
காளைக்கும் - இருஷபம்போன்ற நளனுக்கும்
ஆவிபோல் - அவர்களுடைய உயிரைப்போலவே
ஆடையும் - வஸ்திரமும்
ஒன்று - ஒன்றே
ஆனது - ஆய்விட்டது.

விரிவுரை:—நுண்ணிய நயமும் இனிமையும் வாய்ந்த செய்யுள்களில் இதுவொன்று. இவ்விருவரும் ஒருயிர் என்பதை நாம் முன்னரே அறிவோம். இப்பொழுது ஆடையும் ஒன்றாய்விட்டது. துன்பத்திலும் இன்ப முண்டு. தீமையிலும் நன்மையுண்டு. நஷ்டத்திலும் அதற்கீடான வொரு இலாபமும் உண்டு. ஆடை யொன்று இழந்தாலென்ன! அதனால் உள்ளும் புறமும் ஒன்றாகும் நலம் இவர்களுக்கு வாய்த்ததே. வறுமை யால் இவர்களது உறவு மேன்மேலும் மிகுகின்றதே யன்றி அகல்வதில்லை. ஏனையோரைப்போல் அல்லாமல் நளனும் தமயந்தியும் நல்குரவால் நெருங்குகின்றனர். இவர்களிருவருக்கும் ஆவி ஒன்றாயிருப்பதற்குச் சான் ருக இப்பொழுது ஆடையும் ஒன்றே ஆய்விட்டது.

பசையற வறண்டு வெப்பத்தால் வேகின்ற பாலைவனம் ஆதலால் அங்குச் செடியும் மலரும் இரா. ஒன்று இரண்டு கள்ளி முதலிய செடிகளில் அரும்புகளைக் கண்ட வண்டு கள் அவ்வரும்புகள் மலரக் காத்துக்கொண் டிருந்து, மலர்ந்தும் தேன் இல்லாததால் ஒன்றைவிட்டு ஒன்றிற் குத் திரிந்தலைகின்றன, என்னும் பொருள் "பூவிரியக் கள்வேட்டு வண்டு உழலும் கானம்" என்ற வருணனை யில் அடங்கி இருக்கின்றது.

குறிப்பு:—(1) ஆடையும், என்பதில் உள்ள உம் என் னும் இடைச்சொல், முன்னேயே ஆவி ஒன்றாயிருந்தது; ஆனால் ஆடை ஒன்றாயிருந்ததில்லை; அது இப்பொழுது ஒன்றாயிற்று என்ற பொருளைத் தருவதால் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

ஆனதே, என்பதிலுள்ள ஏகார இடைச்சொல் நிச்சய மாக ஆய்விட்டது என்ற குறிப்பைக் கொண்டிருப்ப தால் தேற்றப் பொருளில் வந்திருக்கின்றது.

(2) கண்ணி அம் தோள் காளை, என்ற வாக்கியம் கண்ணியை அணிந்த அழகிய தோள்களை உடைய காளை என்று விரியுமாகையால் கண்ணி அம், என்ற தொடரும், தோள் காளை என்ற தொடரும், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.

புன் வேட்டை - புள்ளைப் பிடிக்கின்ற வேட்டை, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வேட்டை ஆதரித்தபோது-வேட்டையை ஆதரித்த போது. இதனில் ஐ என்னும் உருபு மாத்திரந்தான் தோன்றாமல் இருக்கின்றது. ஆகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

[மானத்

அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார்
திறம்பிழைத்தார் தெய்வமிகழ்ந்தார்--புறங்கடையில்
சென்றார் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா
நின்றாள் விதியை நினைந்து. 85

பதவுரை.

அறம் - அறநெறியிலிருந்து
பிழைத்தார் - தவறினவர்கள்,
பொய்த்தார் - பொய் சொன்னவர்கள்,
அருள் - அருளை
சிதைத்தார் - கெடுத்தவர்கள்,
மானம் - மானத்தினுடைய
திறம் - பெருமையிலிருந்து
பிழைத்தார் - தவறினவர்கள்,
தெய்வம் - தெய்வத்தை
இகழ்ந்தார் - இகழ்ந்தவர்கள்
(ஆகிய இப்படிப்பட்ட கொடியவர்களுடைய)
புறம்கடையில் - (வீட்டு) வாயிற்படியில்
சென்றார் - சென்றவர்கள்
புகு - சேர்கின்ற
நரகம் - நரகத்தை
சேர்வாய் கொல் - நீ அடைய விரும்புகின்றாயோ,
என்று - என்று (தமயந்தி கலியைப் பார்த்துச சொல்லி)
அழியா - மனங்கரைந்து
விதியை - விதிசெய்யும் கொடுமையை
நினைந்து - எண்ணி
நின்றாள் - நின்றாள்.

விரிவுரை:—ஆடையைக் கவர்ந்துகொண்டு அந்த ரத்தே நின்று "நன்னாடு தோர்பித்தோன் நானே காண்," என்ற கலியை நோக்கித் தமயந்தி கூறிய சொற்களை இச்செய்யுளில் காண்கின்றோம். "ஏ, எங்கள் நாட்டைத் தோற்பித்தோனே, பாபிகளும் பொய்யர் களும் குரூர நெஞ்சுடைய துரோகிகளும் மானமில்லாத வர்களும் தெய்வத்தை இகழ்கின்றவர்களும் வசிக்கின்ற வீட்டின் வாயிற்படியை மிதித்தவர்கள் அடையவேண் டிய கொடிய நரகத்திற்கு நீ போக ஆசைப்பட்டோ, இவ்வாறு செய்தனை," என்று கலியை நொந்து பிறகு தன் விதியை நினைத்துச் சோர்வடைந்து தமயந்தி நின் றாள் என்பது இச்செய்யுளின் பொருள். பாபி பொய்யர் முதலாயினார் வசிக்கின்ற வீட்டின் வாயிற்படியை மிதித் தவர்களே கொடிய நரகம் சேர்வார்களென்றால் அப்பாபி களுக்கும் பொய்யர்களுக்கும் துரோகிகளுக்கும் மான மில்லாக் கயவர்களுக்கும் தெய்வ நிந்தனை செய்வோர் களுக்குமே உரியதாய் அமைக்கப் பட்டிருக்கின்ற நரகம் எத்தனை கொடியதா யிருக்கும் என்று சொல்லவும் வேண் டா. இத்தகைய தீயர்களின் வாயிற்படியை மிதித்தவர் என்றது, அவர்களோடு உறவு பாராட்டச் சென்றவர்களை மாத்திரமே குறிக்கும் ஆனால், தீயோர் வசிக்குமிடம் என்று தெரியாமலும் அல்லது அவர்கள்பால் பகையா லேனுங்கூட அவர் மனைப்புறஞ் சென்றவர் நரகஞ் சேர் வார் என்று அச்சுறுத்துவதுபோல் இச் செய்யுளின் வாசகம் நிற்கின்றது. இதுவும், 'தீயாரைக் காண்பதுவுந் தீதே' என்னுங் கொள்கைக்கு இணங்கும். எனினும் இங்குக் கூறிய ஐவகைக் கயவர்களுக்குரிய நரகத்தின் கொடுமையும் அவர்களால் பிறருக்கு விளையக்கூடிய தீமையின் அளவையும் காட்டுவதையே கவி மேற் கொண் டிருக்கின்றார்.

பிழைத்தார் பொய்த்தார் சிதைத்தார் பிழைத்தார் இகழ்ந்தார், என்னும் இச்சொற்கள் பிழைத்தவர் பொய்த் தவர்.........என்ற பொருள்கொண்ட வினையாலணையும் பெயர்கள் (243-வது பக்கம்). இவைகளெல்லாம் தனித் தனி ஆறாம் வேற்றுமைத் தொகைகள். அறம் பிழைத்தா ருடைய புறங்கடையிலும், பொய்த்தாருடைய புறங்கடை யிலும், அருள் சிதைத்தாருடையபுறங்கடையிலும், மானத் திறம் பிழைத்தாருடைய புறங்கடையிலும், தெய்வமிகழ்ந் தார்களுடைய புறங்கடையிலும், (என்று தனித்தனியாகப் 'புறங்கடையில்' என்பதை ஒவ்வொன்றோடுஞ் சேர்த் துக் கொண்டு) சென்றார் (இதுவும் வினையாலணையும் பெயரே) புகுகின்ற நரகம், என்று முடித்துக் கொள்ள வேண்டும். ஆனால், அறம் பிழைத்தார் முதலிய ஐந்தை யும் முதல் வேற்றுமையாகக் கொண்டு, 'புறங்கடையிற் சென்றார்' என்பதையும் ஆறாவதாக இன்னொருவகை தீயரைக் குறிக்கின்றதெனப் பொருள் படுத்தி இவ்வறு வகையினரும் போகின்ற நரகம் என்று முடித்துக் கொள்ளலாமோ எனவும் தோன்றலாம். எனின், 'புறங் கடையிற் சென்றார்" என்பது யாரைக்குறிக்கின்றதென் னும் ஐயம் ஏற்படுகின்றது. புறங்கடையென்றால் வீட்டுவா யில், என்பது அர்த்தம். ஆயின் 'புறங்கடையில் சென் றார்' என்பதைத் தனியாக ஒருதிறத் தீயவரைக் குறிப் பதாகக் கொண்டால், யார் வீட்டு வாயிலிற்கு, எதற் காகச் சென்றவர் நரகம் புகவேண்டியவர் என்பது இச் செய்யுளில் தெரியக்கிடக்கவில்லையே. ஆயினும், "அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன் கடை நின்றாரின் பேதையார் இல்" என்ற திருக்குறளை மனதிற் கொண்டு, "விபசார எண்ணத்தோடு பிறன் மனைவி யைக் காதலித்து அவன் வாயிலில் சென்று நின்றவர்" என்னும் பொருள் "புறங்கடையிற் சென்றார்" என் பதற்குப் பொருந்தலாம் என நினைக்கலாம். எனினும் இது பொருந்தா தென்பதற்குச் சில காரணங்கள் இருக் கின்றன. குறளில் இருப்பது பிறன்கடை, புறங்கடை யல்ல. பிறன்கடை யென்றால் பிறனுடைய வாயில் என ஆகுமாதலால், 'பிறன் மனைவியை விழைந்து' என்று ஒருவாறு சொல்ல இயலும். இதுவும் இக்குறள் 'பிற னில் விழையாமை' என்னும் அதிகாரத்தில் வந்திருப் பதுபற்றி அப்பொருள் ஏற்கின்றது. அதுவே 'இரவச் சம்' என்னும் அதிகாரத்திற் காணுமானால் 'யாசகம் செய்யும் பொருட்டு இன்னொருவன் வாயிலை அடைந்த வன் என்று பொருள்படுவதாகும். 'பிறன்கடை' என்ப தே அதிகாரத்தை ஒட்டிப் பொருள் மாறக் கூடியதா யிருக்க, இப்பாசுரத்தில் 'புறங்கடையில் சென்றார்' என்பதை வேறான ஒரு பாவமாகக் கொள்வதற்கு வேண்டிய ஆதாரம் அந்தச் சொற்களில் இல்லை. மேலும் விபசாரம் என்பதொன்று உண்டென்று மறந்தும் தமயந்தி மனதில் நினைத்தாளென்பது நயமுடைய பொருளல்ல.

சேர்வாய் கொல், என்று தமயந்தி கலிக்கு இரங்கி ஐயமெய்தியதாகக் கருதும் உரையே அவள் பிறப்பிற் கும் குணத்திற்கும் ஏற்றதாகும். "ஏ, கலியே, இவ்வாறு எமக்கு நீ தீங்கிழைக்க நினைத்தது என்னே! நாங்கள் உனக்கேனும் பிறர்க்கேனும் ஒரு தீமையும் செய்தறி யேம். எங்களைக் கெடுப்பது உனக்குப் பெரும் பாவ மாம். இப்பாவத்தை நீ எதற்காகப் பூண்டனை. நரகத் திற்குப் போகவேண்டும் எனும் ஆசை உனக்கு வந்துற் றதோ! உற்றதாயின் அதற்கு வேறுவழி அறியாமல் எங்களைத் துன்புறுத்தி அந்தப் பாவத்தினாலேனும் நீகொண்ட ஆசை நிறைவடைய வேண்டுமென்பது உன் நினைவோ!" என்று தமயந்தியின் கருத்தை விரித் துரைக்கலாம். அவ்வாறின்றி, கொல், என்னும் இடைச் சொல்லை அசைநிலையாகக் கொண்டால் சேர் வாய் என்பது சேரக்கடவாய் எனப் பொருள்பட்டுத் தமயந்தி கலியைச் சபிப்பதுபோல் தோன்றும். மேன் மக்கள் தமக்குக் கஷ்டம் வந்து வருத்துமபோது தமது விதியை நினைத்து ஆறுவார்களே யல்லாது அவ்விதியை நடத்திவைக்கும் கருவியாயமைந்த மற்றவரை நோகார், சபிக்கவுஞ் சபியார். ஆதலாற்றான், "விதியை நினைந்து நின்றாள்", என்று கவி நமக்கு நினைப்பூட்டுகின்றனர். இக்கருத்தை அடுத்தசெய்யுள் வெளிப்படையாக விளக்கு கின்றது.

வைபந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செய லுண்டோ—மெய்வகையே
சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலர்ந்து.

கருத்து:—"மெய்ந்நெறி மாறாத வேந்தனே, தெய் வமே புகுந்து நம்மைக் கெடுத்தால் நம்மாலதை விலக்கக் கூடுமோ? இனி இவ்விடம் விட்டுப் போவோம்" என் றாள் தமயந்தி.

189022

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(757-வது பக்கத் தொடர்ச்சி)

32. ஆடிகளும் கள்வரோ!

இவ்வுரையைச் செவியேற்ற அகிலாண்டேச்வா ருடைய திருமேனி சிவந்தது. இமைப்பதையும் மறந்து அரசனை இகழ்ந்து நோக்கினார். இப்பார்வையை எதிர் நோக்க இயலாத வேந்தன் தலைசாய்ந்து, "ஐய, வெகு ளேல். மற்று, நம் மதவிடயமாய்ச் சட்டங்கள் விதிப்ப திலும் எடுப்பதிலும் எம் சிந்தனையை மதியாது விரா டன் வகுத்ததெல்லாம் வழங்குமாறு எம்மை வற்புறுத் திப் பெற்றதேனோ!" என்றனன்.

"ஏற்றனவென்று யான் எண்ணியவற்றைச் செய் தேனே யன்றி மற்றொருவன் கருத்திற்கிணங்கி யான் என் கொள்கையை விற்றேனல்லேன்."

"கொள்கையை விற்றீர் அல்லீர் என்று யான் தேரு முன் இஃதியம்புமின். நெருநலிரவு நிசிப்போதில் யாவ ரோ சிலர்வந்து அயலறையில் நும்மோடும் எம் தம்பி விராடனோடும் அந்தரங்கமாய்ப் பேசி யகன்றனரே, அவர் எச்செய்தி யோதினர்? 'சித்ராங்கன்', 'இளவா சன்', என்னும் பேர் அவருரையின் இடையிடையே வரக் கேட்டேன். 'வேந்தனைக் கண்டு யாம் இதனைக் கூறவேண்டும்" என்று அவர்கள் பன்முறை சொல்லிய தும் என்செவிக் கெட்டியது. அவர்க ளென்னைக் காணவொட்டாமல் தடுத்தீர். விராடனைக் காலைமுதற் காணேன். அவர்க ளுரைத்தது இன்னதென்று நீ ரிது காறும் என்பாற் செப்பவில்லை. நும் நாவை அவற்கு விற்றுவிட்டீர் போலும்.........வாளும் உறையும் போல் நீவிரிருவரும் இணங்கியே நிகழ்கின்றீர்."

ஸ்ரீ அகிலாண்டேச்வர சுவாமிகளது முகம் இப் பொழுது வெண்டாமரையாய் வெளுத்தது. வாளும் உறையும்போல் அவர் விராடபத்திரன் சூழ்ச்சியோடு பொருந்தி யில்லையாயினும், அரசன் இடித்துரைத்த இதற்கு அவரால் எதிர் விளம்புவது அரியதாயிற்று. முன்னிரவு நிசியிற் சிலர் வந்து அயலறையில் இரக சியமாய்ப் பேசியதும், அவர் கொணர்ந்த செய்தி அரசனுக்காகவே இருக்கத் தானும் விராடனும்

அவர் அரசனைக் காணாவண்ணம் தடுத்ததும், அரசனுக்கு இதுகாறும் அவர்களுரைத்ததைச் சொல்லாதிருப்பதும் உண்மையே. அயர்ந்து துயின்றிருந்தான் என்று இவர் எண்ணியிருந்த அரசனது செவியைப் பக்கத்தறையில் மெல்லெனப் பேசிய தொன்றும் சார்ந்திராதென்று மதித்திருந்த மடாதிபதி "இன்று யான் வஞ்சக்கள்வனாய் வேந்தன்முன் நிற்கலாயிற்றே" யென்று உள்ளம் புழுங்கினார்.

இரத்தினபுரிக்கு ஒருகாத தூரத்திற்கப்பால் முன்னாள் மணிவாளனும் கஜேந்திரஸிம்மனும் எதிர்த்துக் கடும்போர் புரிந்ததன் இடையே பாண்மகள் தோன்றிச் சித்திராங்கனைச் சிறைநீக்குமாறு அவர்களை அழைத்தேகிய வழியில் இளவரசற்கு உற்றனயாவும் அவள் வாய்கேட்டமணிவாளன் சித்திரமோகனமாளிகையை எய்தியவுடன் அதன் வாயில் அடைபட்டிருப்பதையும் அக்கோட்டைக்குள் படைஞர் குழுமி இருப்பதையுங் கண்டு மதிலைத் தகர்த்தெறிந்தே உட்புறம் எய்தஇயலுமென நினைத்தான். அதற்கு வேண்டிய ஆயுதங்கள் அவன்பால் இருந்தில. இளவரசன் அடைந்துள விபத்தையும் அரசனுக்குத் தாழாது தெரிவித்தல் தன் கடனென்றும் எண்ணினான். ஆதலால், எயிற்புறம் தன் படையோடு சூழ்ந்திருந்தபோது மணிவாளன் தன்சேவகர் நால்வரை இரத்தினபுரி சென்று அரசனுக்கு யாவும் உரைத்து உதவிச் சேனையும் உயுத்த ஆயுதங்களும் கொணருமாறு விடுத்தனன். நிசிப்போதில் அரசன் சயனித்திருந்த மனைக்கயலில் வந்து பேசியவர் இவர்களே.

மணிவாளன் அனுப்பிய இத்தூதர் நால்வரும் இரத்தினபுரி வந்து சேர்வதன்முன்னரே விராடபத்திரனுக்கு இதுபற்றிச் சிற்சில விஷயங்கள் தெரியும். காவுடைய நெஞ்சிற்கு ஒற்றன்றி உற்றதுணை யாதுளது? இரத்தினபுரியைச் சுற்றி இருகாததூரத் தெல்லைக்குள் எங்கும் விராடபத்திரனது ஒற்றர்கள் இயங்கி யிருந்தனராகையால், மணிவாளனும் கஜேந்திரஸிம்மனும் பொருததும், காஷ்மீரத்தரசன் அவர்களோ டிருந்ததும், இளவரசனைக் காக்க என்று பாண்மகள் ஒருத்தி அம்மூவேந்தரையும் உடனழைத்துச் சித்திரமோகன மாளிகைக்கு ஏகியிருப்பதும் விரைந்துவந்து அவர் விராடனுக்குத் தெரிவித்துளார். உடனே விராடன் அவர்களைக் கடுவிசைப் பாய்மாவேற்றிச் சித்திரமோகன மாளிகையின்கண் நிகழ்வனவற்றைத் தெரிந்துவந்து தன்பால் இரவுகழியுமுன் தெரிவிக்குமாறு போக்கினன். சென்ற இவ்வொற்றர் திரும்பி வருவதற்குள், மணிவாள மன்னன் முன்னரே அனுப்பின அந்நால்வரும் சங்கரமண்டபத்தைச் சேர்ந்து அரசன்பால் தம்மை அங்கிமிடமே கொண்டேகக் கடைக்காவலரை வேண்டினர். மடாதிபதியறியாமல் ஒருவரும் அரசனைக் காணப்படா தென்னும் விதியொன்றிருந்தபடியால் காவலாளர் இவர்களை அவர் படுத்திருந்த அறைக்குக் கொண்டேகினர். தான் போக்கியுள ஒற்றர் வரும் வழிமேல் விழியை நாட்டி மேனிலைமாடத்தி னின்றிருந்த விராடபத்திரன், மண்டபத்துள் சிலர் புகுவதறிந்தவுடன் தனதொற்றரோ அவரென மதித்து எதிர்வர, அன்னார் மடாதிபதியின் அறைக்கண் செல்லுதலும் தானுமவரோடு அவ்வறை நுழைந்தனன். அகிலாண்டேச்வர சுவாமிகளும் கண்விழித்தார்.

வந்தவர் தனதாட்கள் அல்லரென்பதை யறிந்த விராடபத்திரன், இவர்கருமம் யாவதாயிருத்தல்வேண்டுமென்பதை விரைவினி லோர்ந்துகொள்ள முயன்று, 'மணிவாள மன்னன் நும்மை எம்பால் அனுப்பியுளானோ' என வினவினன். அதற்கவர், "அரசனுடைய காதிற்கே உரியதாய செய்தி தாங்கி யாம் மணிவாள னிடத்தினின்று வந்துளோம்; அடிகாள் நாங்கள் வேந்தனைக் காணுமாறு பணித்தல் வேண்டும்" என்று மடாதிபதியை நோக்கிக் கூறினர். "ஆயின், அரசனைத் துயிலுணர்த்தி வரும்வரையில் இவ்வயின் இருங்கள்" என்று எழுந்தனர் அகிலாண்டேச்வர சுவாமிகள். அப்பொழுது விராடபத்திரன் அவரோடு இரண்டடி அயலொதுங்கிச், "சுவாமிகாள், வேண்டா. இவர்களோ படைஞர். பகைவர் யாவரேனும் ஏவ, நம் வேந்தனை இந்நள்ளிரவில் சதிசெய்து கொலைபுரிய வந்திருப்பினும் இருக்கலாம். ஆதலால் ஓராமல் நாமிவர்களை விச்வகேசரியினருகு அழைத்தேகுவோமாயின், நமதரசனை நாமே படுகொலைஞர் கையில் காட்டிக்கொடுத்தவர்களாய் முடிவோம்.........இவர் கருமத்தை இன்னுஞ் சிறிது ஆய்வோம்" என அவர் காதில் ஓதினான். இது கேட்ட மடாதிபதி சிறிது துணுக்க மெய்தினாரெனினும், வேந்தனுக் கென்று வந்த இரகசியத்தை அவன்பால் செலுத்திவிடுவதே கடமை என்னும் நினைவினால் பின்னும் தயங்குவது கண்ட விராடபத்திரன், "சென்ற பிற்பகல் நிகழ்ந்துள சில செய்திகள் என்னுடைய ஐயத்தைப் பலப்படுத்துகின்றன. நேரம் வாய்க்காததால் நான் இதுகாறும் அவைகளை நும்பால் செப்பியிலன். இளவரசனை நரபாலன் வதைக்க எண்ணி மோசமாய்ச் சித்திரமோகன மாளிகைக்குக் கொண்டேகியுளனென்றும், கஜேந்திரஸிம்மனும் மணிவாளனும் தம் படையோடு அவ்விடம் விரைந்துளாரென்றும் ஒற்றரால் இன்று மாலை யான் அறியலாயினேன். காஷ்மீரத்தரசனும் அவர்களோடு இருந்தனனாம். இது எமக்கு வியப்பைத் தருகின்றது. இவர்தம் கருத்தில் கிடப்பது பகையோ, நட்போ அறிகிலேம். எதுவாயிருப்பினும், இவர்களுடன் சேர்ந்தேனும் பொருதேனும் எம் மைந்தன் சித்ராங்கனைக் காக்குமாறு விதித்துச் சிறந்தவீரர்கள் தங்கிய சேனையொன்றைச் சித்திரமோகன மாளிகைக்கு விடுத்துள்ளேன். இந்நிலையில் இத்திண்ணிய ஆட்கள் நால்வரை அரசன்பால் எய்துவித்தல் நம் மந்திரத்திற்கு அழகன்று" என்று மேன்மேலும் பகரவே, காலம் இவ்வாறு கழிவதற்குப் பொறுக்காத அத்தூதர், "ஐயன்மீர், எம்முடைய செய்தி தாழ்ந்துரைக்கத் தக்கதன்று, வேந்தனிடம் எம்மைச் செலவிடுமின்......வேந்தனைக் கண்டு யாம் இதனைக் கூறவேண்டும்," என இரைந்து பேசினர்.

மடாதிபதிக்கு வழியொன்றும் விளங்கவில்லை. விராடனது வாயிலிருந்து வருவதெல்லாம் உண்மையே என்னும் நியதி இல்லையென்பது அவருக்குத் தெரியும். ஆதலின், என்ன நினைத்து இவன் என்ன செய்கின்றானோ, என்ன சொல்கின்றானோ என்னும் சந்தேகம் பிறந்ததெனினும், விராடன் அச்சுறுத்தியதற்கும் அஞ்சிக் கூற்றுவனைத் தம் கொற்றவன்பால் ஆற்றுப்படுத்தினதாக முடிந்தால் என் செய்வதென்று எங்கினார். விராடபத்திரனுடைய மனமும் அலைந்தது. சித்திராங்கன் இறந்துவிட்டான் என்று கூற இவ்வாட்கள் வந்துளாரோ, அல்லது அவனிருக்கும் நிலையைத்தான் செப்பவல்லாரோ என்பது அறிந்திலன். இப்பொழுது தன் செயலைத் தக்கவாறு சூழுமுன் இவர் செப்பவந்துள விடயம் யாவதெனத் தானும் தேர்ந்து தன் கருத்திற் கொக்க மடாதிபதியையும் தேற்ற வேண்டியது இன்றியமையாததாயிற்று. எனவே இவன் மீண்டும் அவ்வாட்களுக் கருகு வந்து, "விரையவும் இரையவும் வேண்டா, நும்மினுமுயர்ந்தோர்மாட்டு இங்ஙனம் குரலெடுத்துப் பேசுதற்கு எங்குக் கற்றீர். நுந்தலைவன் மணிவாள மன்னன்

போதனையோ இது! ......உங்கள் கருமம் யாதெனத் தெரிவதன் முன் எம்மிறைவன்பால் நீவிர் அணுகவொட்டோம். பகர்மின் வந்த பரிசு," என்றான்.

"கோமகனைச் சிலர் சிறைப்படுத்தி அவனுயிர்க்கு இறுதி சூழ்கின்றனர். இருக்கும் நிலையும் இக்கட்டானது. இதனை விலக்குதற்கேற்றன விரைந்து நாடாவிடின் யாவும் அவலமாய் முடியும்......இதன்மேல் ஒன்றும் அரசனன்றிப் பிறர்மாட்டுப் பகர்தற்கு எந்தலைவன் பணித்திலன்," என வந்துள நால்வர்களி லொருவன் விடையளித்தான். இறந்திலன் இன்னும் இளவரசன் என்பதுணரவே விராடபத்திரனது மார்பு படபடத்தது. இதனை வேந்தனுக் குரைக்காது தீராது, என்பார்போல் மடாதிபதியும் அவன் முகம் நோக்கினார் அவனும் தூதர்களைப் பார்த்து எள்ளியொரு நகைசெய்து, "நன்று, நும் தலைவனது விரைவும் துணிவும் சாலவும் நன்று. நேற்றை நண்பகலே அவற்கு இச்செய்தி தெரிந்திருந்தும் எமக்கதனை அறிவிக்க நடுநிசியாயது எக்காரணம் பற்றியோ.....பாண்மகள் உரைத்ததை நம்பாமலோ அவன், சித்திரமோகன மாளிகைக்குச் செல்லலுற்றது. கஜேந்திரஸிம்மனுடன் பெற்ற புதுநட்போ மற்றுக் காஷ்மீரத் தரசனது துணைநலமோ மணிவாளன் தன்னரசனை மறந்து தனியே சென்றது!" எனத் தகைந்தனன்.

"நீருரைத்த மொழியாவும் உண்மையன்றென மறுக்கற்பாலதன்று. ஆயினும், இளவரசனுக்கோர் இடுக்கண் உற்றதெனின், இவையெலாம் சொல்லி அவனுக்கு உதவி மறுப்பதும் போதுமோதான்," எனத் தூதர் எதிர் விளம்புமளவில் விராடபத்திரன் அகிலாண்டேச்வரர் பக்கம் திரும்பி, "யானுனக்கு உரைத்த யாவும் மெய்யென்று இப்போது சங்கையற உணர்ந்தாயோ" வெனத் தன் விழிகளால் வினவினான். அவரும் அதன் அமைதியை வியந்து காட்டினர். இக்குறிப்புணர்ந்த விராடபத்திரன் மணிவாளனது ஆட்களை நோக்கி," உதவிப் படையும் இன்று மாலையிலேயே விடுத்துள்ளேன். நம் சேனைத்தலைவர் பிரதாபதீரர் ஆய்ந்தவீரர் ஆயிரம்பேருடன் இதன்முன் அங்குச் சென்றிருப்பார். கவலற்க...... நீவிர் கருமம்கடந்து வந்தீராயினும் இனிக் காலந் தாழாமல் அகலவேனும் அகன்றிடுமின்." என்று சாற்றினான். மணிவாளன் விடுப்பவந்த சேவகர்களும் யாவும் முன்னமே செய்யப்பட்டிருப்பதால் இனி அரசனைக் காணத்தான் வேண்டுமென்று வற்புறுத்துவதில் காரியமில்லை யெனத்துணிந்து "ஆயின், விடைகொள்கின்றோம். சித்ராங்கனுக் கேதும் தீதிலவே. உதவிக்குப் படை போயிருப்பதில் ஐயமில்லையெனின் இதன்மேல் எம் இறைவனது அருந்துயிலை இவ்விரவு கலைக்க வேண்டா" என்றனராகிச் சென்றுவிட்டனர். அதன்பின் விராடபத்திரன் "இரவு கழிந்ததும் அரசனுக்கு நிகழ்ந்ததைக் கூறுவோம்" என்று மடாதிபதிக்கு உரைக்க இருவரும் தத்தம் அறையேகினர்.

நிலங்காக்கும் வேந்தருக்கு நித்திரை அரிதெனின் அந்நிலத்தைக் கரவால்கவர்தற்குச் சூழ்கின்ற நெஞ்சினர் தம் கனவிலேனும் கண்ணுறக்கங்கொண்டறியக் கூடியவரல்லர். துயிலறைசேர்ந்த விராடன் அணையின்மீது தலைசாய்த்தானெனினும் குதிரையின்குளம்படிச் சத்தத்தின்மேலே தன் செவியை வைத்துக் காத்திருந்தான். பல்லியின் சொல்லும் அவனுக்குத் தூரத்தில் வரும் புரவியின் அடிபோன்றே தோன்றியது எழுந்திருப்பான். சாளரத்தைச் சார்ந்து நெடுந்தூரம் நோக்குவான், நினைப்பான். மீளவந்து தன் தவிசில் அயர்ந்திருப்பான். கழுத்தில் கயிறிறுக்கிக் கேட்குங்கால் அப்பொய் பழுத்த நரபாலன் தான்தன் வாய்வழுக்கிச் சிலவார்த்தை தனைப்பழித்துச் செப்பிவிட்டால் பின்னர்த் தலைகாக்குந் திறமுண்டோ தனக்கு, என்று அஞ்சி நடுக்குறுவான். இந்நிலையி லுழன்றவன் காதிற்குத் தன் அறையின் கதவினை யாவரோ தட்டுகின்ற ஒலி கேட்டது. உறைகழன்ற நெடுவாளை ஒருகையில் பின்னொளித்து மறுகையாற் கதவைத் திறக்க அவன் விடுத்த ஒற்றனை எதிர் நிற்கக் கண்டான்.

T. N. சேஷாசலம்.

வானசாஸ்திரம்.

புதன், சுக்கிரன்.

சூரியனைச் சுற்றியோடும் கிரகங்களில் புதனும், வெள்ளி அல்லது சுக்கிரனும், பூமிக்கும் சூரியனுக்கு மிடையி லிருப்பதால் அவற்றை உட்புறக் கிரகங்கள் என்றும், மற்றக் கிரகங்களெல்லாம் பூமிக்கப்பா லிருப்பதால் அவற்றை வெளிப்புறக் கிரகங்கள் என்றும் வகுத்திருக்கிறார்கள். உட்புறக் கிரகங்களுக்கும் வெளிப்புறக் கிரகங்களுக்கு முள்ள ஒரு முக்கியமான வேறுபாடு, புதன் சுக்கிரன் ஆகிய இரண்டும் தத்தம் பாதையில் சூரியனைச் சுற்றி வருகையில் பூமிக்கும் சூரியனுக்கு மிடையே வருவனவாயிருக்கின்றன. இதன் காரணமாக அவைகளும் சந்திரனைப்போல் தேய்வதும் வளர்வதும்போலத் தோன்றுகின்றன. இது வெறும் பார்வைக்குத் தெரியாது. ஆனால் தூரதிருஷ்டியின் மூலமாய் இவ்விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம். காப்பர்னிகஸ் முதல்முதல் சூரியனே சூரியகிரகக் கூட்டத்துக் கதிபதி யென்றும் சூரியனைச் சுற்றியே பூமியும் மற்றக் கிரகங்களும் ஓடிக்கொண்டிருக்கின்றன வென்றும் ஸ்தாபிக்க எழுந்த காலத்தில் அவர் கொள்கை சரியான கொள்கையாயிருக்குமிடத்துப் புதனையும் சுக்கிரனையும் நெருங்கிப் பார்க்க முடியுமானால் அவைகளும் சந்திரனைப்போலத் தேய்வதும் வளர்வதுமாய்க் காணப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட் டிருந்தது. ஆகவே முதல்முதல் தூரதிருஷ்டியின் மூலமாக இம்மாற்றத்தைத் தெரிந்துகொண்ட வானசாஸ்திரிகள் காப்பர்னிகஸ் என்பவருடைய கொள்கை வலுவுற்றதென்று தெரியப்படுத்தினார்கள்.

மற்றொரு வேறுபாடு, புதனும் சுக்கிரனும் பூமிக்கும் சூரியனுக்கு மிடையில் இருப்பதால் அவைகள் சூரியனை விட்டு விலகி அதிக தூரம் செல்வதில்லை. இதன் காரணமாகத்தான் காலைத் தாரகையாயும் மாலைத் தாரகையாயும் இவ்விரண்டு கிரகங்களும் மாறி மாறித் தோன்றுவது. புதன் சூரியனுக்கு மிக்க சமீபத்தி லிருப்பதனால் சூரிய அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் சற்றுமுன் தோன்றி மறைந்து போவதினால் அதை எப்பொழுதும் பார்ப்பது சுலபமன்று. சுக்கிரன் அவ்விதமில்லாமல் மிகவும் பிரகாசமாயிருப்பதோடுகூடச் சூரிய உதய அஸ்தமனங்களுக்குச் சில காலங்களில் மூன்றுமணி நேரம் முன்னும் பின்னுமாகத் தோன்றுவதனால் சுக்கிரனையே சாதாரணமாகக் காலைவெள்ளி என்றும் மாலைவெள்ளி என்றும் எல்லாரும் சொல்லிக்கொள்வது.

இவைகள் சூரியனைச்சுற்றிவருகையில் நேராய்ப் பூமிக்கும் சூரியனுக்கு மிடையில்வரும் நிலைக்கு உட்புறச் சங்கமமென்றும், சூரியனுக் கப்பால் பூமி சூரியனுடன் நேராய் நிற்கும் நிலைக்கு வெளிப்புறச் சங்கமமென்றும்

பெயர். இந்தக் காலங்களில் இவைகள் நம் கண்ணுக்குத் தோன்ருமல் சூரிய வெளிச்சத்தில் ஆழ்ந்துபோகின்றன. சூரியனிலிருந்து இவைகளால் எட்டத்தக்க தூரத்தில் சூரியனுக்கு மேற்புறமோ கீழ்ப்புறமோ நிற்கும் நிலைகளுக்கு மேல்நீட்சி கீழ்நீட்சி என்றும் பெயர். இந்தக் காலங்கள்தான் இவைகளைத் தூரதிருஷ்டியால் நன்கு பரிசோதிப்பதற் கேற்ற காலம். ஆனால் இந்நிலைகளில் இக் கிரகங்களில் பாதிபாகம்தான் சூரிய வெளிச்சம் பெறுகின்றது. உட்புறச் சங்கமம் வெளிப்புறச் சங்கமம் அமாவாசை பூரணைக்கு ஒத்து இருக்கின்றன. உட்புறச் சங்கம காலங்களில் சில வேளைகளில் இந்தக் கிரகங்கள் சூரிய மண்டலத்துக்கு மேலாகவே செல்கின்றன. ஆனல் அனேக வருஷங்களுக்கு ஒருமுறைதான் இது நடக்கின்றது. சுக்கிரன் இவ்விதம் சூரியமண்டலத்தின் மேலாகச்சென்றது கடைசியாக 1882-ம் ஆண்டில். மறுபடியும் 2004-ம் வருஷம் வரையிலும் இது சம்பவியாதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். புதன் சுக்கிரனைப் பார்க்கிலும் அதி சீக்கிரத்தில் சூரியனைச்சுற்றி வருவதனால் புதன் அனேக தடவைகளில் சூரியனுக்கு மேலாகச் செல்கின்றது.

புதன் சூரியனுக்கு அடுத்திருக்கும் கிரகம். அதன் அளவு மற்றவைகளைப் பார்க்கிலும் மிகச் சிறியது. குறுக்களவில் 2765 மைல் நீளமுள்ளது. மிகச் சிறியதா யிருப்பதனால் சுற்ருேட்டத்தில் ஒரு முறை சூரியனுக்கு மிகச் சமீபத்திலும் மற்ருெருமுறை இதைப் பார்க்கிலும் இரண்டுமடங்கு தூரத்திலும் செல்கின்றது. இதன் காரணமாகப் புதவருஷத்தில் சில சமயங்களில் அதிகவெப்பமும் சூரியனிலிருந்து அதிக தூரம் செல்லும்போது மிகவும் குறைந்த வெப்பமும் பெறுகின்றது. புதனுக்கும் சூரியனுக்கு மிடையிலுள்ள தூரம் 36,000,000 மைல். அது 88 நாட்களில் சூரியனைச் சுற்றிவருகின்றது. அதாவது ஒருவருஷகாலத்தில் நான்குமுறை சூரியனைச்சுற்றி வருகிறது.

சுக்கிரன் சற்றேறக்குறைய பூமியின் அளவு உள்ளது. அதன் குறுக்களவு 7826 மைல். பூமியின் குறுக்களவு 7918 மைல். சுக்கிரனுடைய பாதை மற்றக் கிரகங்களுடைய பாதைகளைப் பார்க்கிலும் ஏறக்குறைய சரிவட்டமாகவே யிருக்கிறது. ஆகையால் சுக்கிரவருஷத்தில் எல்லாக் காலங்களிலும் சூரிய வெளிச்சம் வெப்பம் சமமாய் இருக்கிறது. சூரியனுக்கும் சுக்கிரனுக்கு மிடையிலுள்ள தூரம் 67,200,000 மைல். சுற்ருேட்டகாலம் 226 நாள்

இவ்விரண்டு கிரகங்களும் சந்திரனைப்போலச்சுற்ருேட்டகாலத்தில ஒருமுறை சுழல்கின்றது என்பது வான சாஸ்திரிகள் துணிவு. அதாவது இவை இரண்டும் எக்காலத்திலும் சூரியனுக்கு ஒரே முகமாக விருக்கின்றன. இவ்வித மிருப்பதனல் இக்கிரகங்களில் ஒரு பாதியில் எக்காலத்திலும் பகலாயிருக்க மற்றப் பாதி எப்பொழுதும் இரவா யிருக்கவேண்டும்.

புதன் மிகச் சிறிய கிரகமாயிருப்பதால் அதனுடைய ஆகர்ஷண சக்தி மிகவும் குறைந்ததா யிருக்கவேண்டும். ஆகவே அதைச் சுற்றிப் பூமியிலிருப்பது போல வாயுப் படலம் இல்லை என்பது துணிபு. அவ்விதம் இருந்த போதிலும் மிகவும் நுண்மையானதா யிருக்கவேண்டும். சுக்கிரன் பூமியளவு பெரியதா யிருப்பதால் அதன் ஆகர்ஷண சக்தி அதிகமாகவே யிருக்கவேண்டும். சுக்கிரனைச் சுற்றி மேகங்களடர்ந்த வாயுப் படலம் சூழ்ந்திருக்க வேண்டும். சுக்கிரன் அதிக பிரபை உள்ளதாயிருப்பதற்குக் காரணம் சூரிய வெளிச்சம் அதன் மேகப்படலத்தில் பட்டு வீசுவதே. சுக்கிரன் சில சமயங்களில் பகற்காலத்திலும் வெறுங் கண்ணுக்குத் தோன்றுகின்றது.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப் படலம்.

(753-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீதியேனின் நீதி யல்லதேனி னன்று.

தாடகையெனும் பெயர்த் தையலாளைக் கொல்லு ாறு இராமனுக்குக் கோசிகன் அறிவுறுத்திய மொழி ளை அந்நிருதியின் எதிரேயே நிகழ்த்தினர் கம்பர்; ான்மீகிமுனிவர் அவளைக் களத்தினுள் கொணர்வ ற்கு முன்னரே முடித்து வைத்தார். இவ்வேறுபாடு ாடக நயத்திற்கிணங்கத் தோன்றலாயிற்று. மற்று, அவ ாக் கொன்ருேன் கொல்வித்தோன் ஆகிய இருவர்தம் னநிலையும் இவ்விரு காவியங்களிலும் எவ்வண்ணம் குக்கப்பட்டுள தென்பதை ஆராயுங்காலையில் அரிய)ரகசியங்கள் பல வெளியாகின்றன.

கம்பர் பெருமானுக்கு வான்மீகி முனிவர்பால் ிமைந்த பக்தி சான்றதோர் தூய்மைத்து. மேலோர் ட்பும் ஞானிகள் உணர்வும் இடையறுது ஒன்ருய்க் ட்புலத்து இனையவென்று தெரிவில நிற்குமாதலால் ிவ்விருபெரும் அருமைமிக்க புலவர்தம் கருத்து ஒக்க டந்தொளிருந் தன்மையை உள்ளுவார் உள்ளங் ளிர்ந்து மகிழ்வர்.

கூற்றுவனுமஞ்சக் கொடுந் தொழிலுழக்கும் தாடகை ரக்கியே யாயினும் கன்னியென்ற காரணத்தால் அவளொடு பொருதிடல், ஏகமாய் எங்கும் நிறைந்து காலதேச வர்த்தமானங்களைச் சாராமல் நிலைநிற்கும் ஒருதனி அறத்திற்கு ஒவ்வுமோ எனும் ஐயமும் தெளிவும் வான்மீகத்தில் வந்துள விச்வாமித்திரனது வாசகத்தில் வெளிப்பட்டு நிற்கின்றன. அங்குக் கோசிகன்,

> "நீ தாடகையைப் பெண்பால் என்று கருதி அவளைவதைப்பதில் அருவருப்பு வைக்கக்கூடாது. பெண்பாலைக் கொல்வது வீரர்களுக்கு அநீதி என்ருலும் நீ இராஜ குமாரனுகையால் நான்கு சாதியார்களுடைய க்ஷேமத்திற்காக இக் காரியத்தைச் செய்தே தீரவேண்டும். எதாவது ஒரு காரியஞ் செய்வதனல் சனங்களுக்கு நன்மை உண்டாகுமானல் அக் காரியம் கொஞ்சம் கெடுதலாயிருந்தாலும், சிறிதுநியாயமும் தருமமும் இல்லாமலிருந்தாலும் அதை அரசன் அவசியமாகச் செய்யவேண்டும் என்பது முறை. உலகத்தைப் பாதுகாத்தலையே நோன்பாகக் கொண்ட அரசர்களுக்கு இதுதான் குலாசாரம். ஆகையால் இந்தக் கொடிய அரக்கியை நீகொன்றே தீர்க்கவேண்டும்"

என்று தன் மனதினை அலைத்த ஐயத்தை இராமன்பால் சார்த்தி அதற்கு அமைதி காட்டுவானயினன். வள்ளுவர்

வாய் அறன்வலி யுறுத்தக் கேட்டுள கம்பரை இக் கொள்கை ஓரளவு திகைக்கச் செய்வ தியற்கையே. "அறத்தினூங் காக்கமுமில்லை," என்றும், "அறத்தான் வருவதே யின்பம்," என்றும் பொய்யாமொழிப் புலவரால் தெருட்டப்பெற்ற நம் தமிழ்ப்புலவர் 'குலாசாரம்' ஆதியாய எண்ணங்களால் அநீதி என்று அறியப்பட்டதொன்று நீதியே ஆய்விடுதல் எங்ஙனம் அமையுமென்று ஐயுறவெய்துகின்ருர். ஒன்று அறமெனின் அறம், அல்லதெனின் அன்று, என்னும் நேர்மைக்கே இசைகின்றது இவர்மனம். தீமையை அகற்றுதற்கும் தீதுபுரித லொண்ணுதென்னுஞ் சுத்ததர்மம் ஒன்றே கம்பரது கருத்தைக் கவர்கின்றது. ஆதலின் முற்றுமுணர்ந்த ஒரு முனிவன், "நல்லதல்ல தாயினும் இக்கருமத்தை நீ செய்து மற்றவர்க்கு நன்மை புரிதல் வேண்டும்" என்று இராமனுக்குக் கற்பிக்கும் உரைகளைக் கம்பர் எடுத்துத் தன்னூலுள் ஆளாது அகற்றி விட்டனர். அறத்தின் வலியிலும் வாய்மையின் ஆட்சியிலும் ஐயந்திரிபின்றித் தோய்ந்துள சிந்தையினேர் மறந்தும் மறத்தினை நன்மையின்பால் கொண்டுய்க்கும் நெறியென்று நினைத்திடார். ஷேக்ஸ்பியர் மகாகவியும் இந்தச் சந்தேகத்தை 'வெனிஸ் வர்த்தகன்' என்னும் நாடகத்துள் தோற்றுவிக்கக் காண்கின்ருேம். செலுத்துங்காலம் கடந்ததென்று களிமயக்குற்ற யூதன் ஷைலாக் என்பவன், அதற்கு ஈடாகப் பத்திரப்படி கடன்காரனது ஊனின் ஒரு நிறைக்கு வழக்காட, அப்பொழுது நியாயவாதியின் வேடம் புனைந்துவந்த போர்ஷியா, அந்தோனியோவின்பால் அன்புகொண்டு இரக்கம்காட்டும்படி அவ்யூதனை எவ்வளவு வேண்டியும் அவன் இணங்காது தான்கொண்ட சலத்தைச் சாதிக்கும் வன்மையே பற்றி நின்றனன். அப்பொழுது போர்ஷியா, "சட்டப்படிக்கு இவன் ஊனைத்தான் தரக் கேட்பானுயின் அதனை மறுக்கக் கடவேம் அல்லேம். இன்சொற்கோ இணங்குவா னல்லன். ஆதலின், அந்தோனியோவின் கதி அவலமாயிற்று," எனக் கையற்றவள்போல் நடித்தனள். தன்னலிவனிற்கு இக்கதி வந்துற்றதென மனமுளையும் பஸானியோ நியாயவாதி என்று நினைத்த தன் மனையாளை நோக்கி, "ஐய, சட்டமும் விதியும் கிடக்க, நீதியல்லதாயினும், உயர்பெரும் உறுதி பயக்குமாறு சிறுபிழை யொன்றுதான் இவ்வொரு முறை இழைத்து, இக்கன்மனப் பேயின் சிந்தனையைச் சிதைத்திடாயோ" என்று மன்ருடினன். முறியிற்கண்ட நிபந்தனையின்படி தீர்ப்பளிப்பதே நீதி. ஆயினும் அந்த நீதியைத் தொடர்ந்து இப்பொழுது நடத்தினல் அது அநீதியாய் முடியு மென்பதற்கு ஐயமில்லை. ஆயினும், இக்கொள்கையை ஷேக்ஸ்பியர், "ஒல்லாது, இதனை மேற்கோளாக நிறுவிப் பற்பல குற்றங்கள் முடுகித் தொடர்ந்திவ் வுலகிற் புகும். அம்முறை அமையாது," என்று போர்ஷியாவின் வாயிலாக மறுத்துவிடுகின்ருர். போர்ஷியா வகுத்த காரணம் அரசியல் தந்திரத்திற் கொக்க நேர்ந்ததேயன்றித் தனியறத்தின் தூய்மையைப் பற்றிய தன்றென்பது உண்மையே. எனினும், இம்மைக்கும் மறுமையேபோல் நன்னீர்மை குன்ரு நெறியொன்றே நேர்மைத்தாம் என்பது இதனல் பெறப்படுகின்றது.

இவையெலாங் கருதிக் கம்பர், "கொஞ்சம் கெடுதலாயிருக்குங் காரியத்தை நீ அவசியமாகச் செய்யவேண்டும்," என்று தன் விச்வாமித்திரன் மனுகுலச்செம்மல் இராமனுக்குச் சொல்வித்ததில்லை என மதிக்கின்ருேம். ஆயினும், தருமத்தின் தனிநிலைப் பெருமையைப்பற்றித் தான் நினைத்த தவ்வளவும் வான்மீகி முனிவரும் நினைத்திரார் என்று கம்பர் எளிதில் எண்ணுந் தன்மையரல்லர். வாங்கரும் பாதநான்கும் வகுத்த வான்மீகிமுனிவர்பால் அவருக்குச் சிறந்த பக்தியுளது. ஆதலின் அங்குக் கோசிகன் உரைத்த நெறியும் நேரிதேயோ என்னும் ஐயம் இவர் மனத்தின் ஒருசிறை தங்கியே நிற்கின்றது. ஆதலாற்ருன், "ஆறிநின்றது அறன் அன்று" என்று பிரித்தற்கும் இயன்றவகையில் தன் விச்வாமித்திரனைச் செப்பவைத்து, அரக்கியை அவன் கொல்வதற்கு ஏவுவதைக் கம்பர் நமக்குக் காட்டுகின்ருர். இத்தூரம் வான்மீகி முனிவர்தம் வாக்கைச் சிலேடையெனும் உதவியாலேனும் பாராட்டிய கம்பர் அவர் நூலை முற்றிலும் பின்பற்றுதற் காற்ருராகி, எல்லையொன்றிட்டு அதனை எட்டியவுடன் நின்றுவிட்டன ரென்றும் காட்டாதிங் ககல்வதருமை. கோசிகன் கூறிய மொழிகளைக் கேட்ட இராகவன் கம்பர்படி, "மெய்ய நின்னுரை வேதமெனக்கொடு செயகையன்ருே அறஞ் செய்யுமாறு" என்னும் மனநிலை யுடையானுகித் தாடகையை வதைசெய்ய ஒவ்வினன். வான்மீகத்தின்படி இராமன் விச்வாமித்திரனுக்கு உரைத்த பதிலில் இக்கருத்து அடங்கி யிருக்கின்றது. ஆயினும், "பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும், இந்த நாட்டுக்கும் வெகுவித நன்மையுண்டாகும் பொருட்டும்" இந்தக் காரியத்துக்குத் தான் உடன்பட்டதாக இராமன் கூறியது கம்பராமாயணத்தில் இல்லை. இதற்குக் காரணம் யாவதாயிருத்தல் கூடுமென்று நினைக்குங்கால், இச்செய்கையின் பலனைச் சிறிதளவேனுங் கருதி அதன் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்ள இசையாத இராமனையே கம்பர் கற்பித்தாரென்பது தெரியவரும். வான்மீகத்தில் கோசிகன் சொன்னதை "விசாரியாமலே செய்யக் காத்திருக்கின்றேன்" என்று விளம்பிய இளவல் தன்னுரை முடியுமுன் விசாரிக்கத் தலைப்பட்டான். விசாரிக்காமல் செய்வதொன்றே இராமனது புகழிற்குக் காப்பா யமையுமெனக் கம்பர் மதித்தாராதலால் இப்பாகம் இங்கு விடப்பட்டது. இனி, வலிந் தகற்றியும் விலகாது உறவுவேண்டும் சூர்ப்பணகையைப் பின்னள் அச்சமுறுத்தி அகற்றுதற்கு இராமன், "நின் அன்னை தன்னை நல்குந் தாடகையை உயிர்கவர்ந்த சரமிருந்தது" என்னுங்கால், "பெண்ணென்று பாராமற் கொல்வேனுன்னை" என்றனன்போல், 'சரமும்' என்றச் சொல்லில் இழிவு சிறப்பும்மையே மறைந்திருப்பதாகக் கொள்ளல் வேண்டும்.

இராமன் தாடகையோடு நடத்திய போரினைக் கம்பர் நான்கு பாசுரங்களுள் வருணித்துக் கூறுகின்ருர். தாடகை,

> செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
> வெங்கட் டீயொடு மேற்செல வீசினள்.

[சிவந்த கையிலிருந்த சூலமாகிய சுடும் தீயினை அவள் தன்னுடைய கொடிய வெப்பமான கண்ணிலிருந்து சொரியுந் தீயோடு சேர்த்து இராமன்மேல் செல்லும்படி எறிந்தாள்]

> புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
> கதிர்கொண் மூவிலைக் காலவெந் தீமுனி
> விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
> மதியின் மேல்வருங் கோளென வந்ததே.

[நாற்றங் கேட்டதும் தின்ன நயக்கின்ற புதியவோர் எமனைப்போன்ற தாடகை கோபத்தோடு எறிந்த பிரகாசிக்கின்ற மூன்று இலைகளையுடைய காலாக்கினி போன்ற அச்சூலமானது, விசுவாமித்திரனது கட்டளையை ஏற்றுநின்ற இராமன்மேல் பூரணசந்திரனைப் பற்றவரும் இராகு வென்னும் கிரகம்போல் வந்தது]

மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
கால னைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்.

[இராமனும் அந்நொடியில் அம்பை எடுத்ததை யேனும் அழகிய வில்லை வளைத்ததையேனும் யாரும் கண்டிலர். மற்று எதனைக் கண்டார் என்றால்—யமனை யே பிடித்து அக்கொடியவள் எவியதுபோன்ற சூலம் உடைந்து விழுந்த துண்டங்களைக் கண்டனர்]

இராமனிவ்வாறு வில்லெடுத்தாளும் விரைவினைக்காண் பதற்கு இக்களத்தினில் முனிவனும் தம்பியும் அன்றி வேறொருவரும் இலராயினும், பலர் இருந்து பார்த்தது போல் 'கண்டனர்' என்று கம்பர் கூறியது, அப்போரை நோக்கும்பொருட்டு விண்ணிற் குழுமியிருந்த தேவர் களைக் குறித்தோ, அல்லது, இக்கவிவாரது உள்ளத்தை இயக்குகின்ற நாடகவுணர்ச்சி நம்மையும் காட்சியாளர் களாய்ச் சேர்த்துக்கொண்டதால் நேர்ந்ததோ தெரிய வில்லை. பிஞ்ஞகன் பிடித்த பெருவில்லை, இராமன்

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினை யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.

[கையால் எடுத்தது கண்டார், உடனே அது ஒடிந்த ஒலியைக் கேட்டார். அவ்வளவேயன்றிக் கண்கொட்டா மல் பார்த்திருந்தவர்களும் அவன் காலில் மிதித்ததை யேனும் நாணைப்பூட்டியதேனும் நோக்கவில்லை. இச் செயலின் வேகத்தை யாரும் அறிந்திலர்]

என்று மீண்டும் இவ்விரைவுயர்வுநவிற்சி இராமனது வில்லாண்மைக்கு வேண்டி வருகின்றது.

அல்லின் மாரிய னையநி றத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கட றூர்ப்பன
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன்வி லக்கினன்.

[இரவில் தோன்றும் மேகம்போன்ற நிறத்தையுடைய தாடகை சொல்லளவிலே கடல்களைத் தூர்த்துவிடக் கூடிய விசையோடு மலைகளைப் பிடுங்கி மழைபோல் வீசினள். அதனை வீரனாகிய இராமன் தன் வில்லி லிருந்து பொழிகின்ற அம்புகளென்னும் மழையால் தடுத்தான்]

தடுத்து, "உயிரைச் சென்று நீ உண்" என்று ஓர் வடிக்கணை அவள் மார்பைக் குறிவைத்துத் தொடுத்து விட்டான். இதன்முன் அவள் காதுகளையும் மூக்கை யும் இலக்குமணன் துணித்தெறிந்ததாக வான்மீகி முனி வர் கூறிய செய்தி கம்பர் நூலில் காணவில்லை. இப்பழக் கமேதான் பின்னுள் இவ்விளைய செம்மல் சூர்ப்பநகை யின்பாலும் வழங்கலாயிற்று. கொல்வதற்கே இருக்கும் தாடகையின் உறுப்புக்களைக் கொன்னே முன் சிதைத் தல் குரூரமென்ற எண்ணத்தால் கம்பர் அதனைக் கொள்ளாது விட்டனரென் றெண்ண இடமுளது.

T. N. சேஷாசலம்.

அரிஸ்தோத்லன்.
(ARISTOTLE)

கிரேக்க ஞானிகளின் கொள்கைகளிற் பெரும்பான் மையும் நம்முடைய உபநிஷத்துக்களில், (பிரதானமாக, பிரகதாரண்யகோபநிஷத், கதோபநிஷத், சாந்தோ கியோபநிஷத், தைத்ரியோபநிஷத், பிரச்னோபநிஷத், அயித்ரேயோபநிஷத்துக்களில்) அடங்கிய முடிபுகளு டன் ஒத்திருப்பதை உணர்ந்து, ஒருவர் மற்றவரின் சித்தாந்தங்களை அபகரித்து, நடையை மாற்றிச் சிறிது பெருக்கியும் சுருக்கியும் தம்முடையன ஆக்கிவிட்ட னர்போலும் எனச் சிலர் எண்ணலாம். அற்றன்று; அவர்களெல்லோரும், பன்னெடுநாள்முன், ஒருங்கு சேர்ந்திருந்தபொழுது, அவ்விசாரிப்புக்களி லீடுபட்டுப் பின் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று, மீண்டும் அவ்விஷயங்களைப்பற்றி மேலாராய்ச்சிசெய்து அம்முடிபு களுக்கு வந்திருக்கக் கூடுமென ஊகிக்க இட முண்டு. ஜீவான்மாக்களெல்லாம் ஒரே பரவஸ்துவின் அம்சங்களன்றோ? இன்னமும், மின்ன லிடி மழை, மாரி கோடை குளிர் வசந்த காலங்கள், ஆதித் தன் திங்கள் விண்மீன்கள்செறிந்த வானம், பரந்த நிலம், அகாத வாரிதி, கொந்தளித்துப் புரண்டோடும் திவலைகள், வெய்யோனின் உக்கிரம், வெள்ளிய மதியத் தின் தண்மை, திரண்டு இருண்டு உருண்டோடும் முகில்கள், பயங்கரச் சண்ட மாருதம், வெள்ளப் பெருக் கெடுத்துப் பாயும் ஆறுகள், நறுமணம் வீசிப் பற்பல வர்ணங்களுடன் தோன்றி மனத்தைக் கவரும் நானாவித மலர்கள், புலன்களை மயக்கும் இந்திரவில், வன்மை மென்மை, பிறப்பிறப்பு, விழிப் புறக்கம், கனவு நனவு முதலாயினவைகளைப் பார்த்து ஓர்ந்து அறிய முயற் சிக்கையில், வியப்பு ஓர் பக்கமும், திகைப்பு வேறோர் பக்கமும், அச்சம் மற்றோர் பக்கமும், ஆனந்தம் இன்னு மோர் பக்கமுமாகச் சூழ்ந்துவர அவற்றிற் கெல்லாம் காரணமான மூலப் பொருள் யாது, எத்தன்மையதென் பதை விசாரித்துப் பார்க்கையில், அப்பிரச்னைகள் அரும்பி, அத்துணிபுகள் அலர்ந்து, தத்வஞானம் பழுப் பது ஓர் விநோத விஷயமல்ல.

சத்தியம் சிவம் சுந்தரம் என்பவைகளை அறிதற் கான செந்நெறியை ஸோக்ரதன் வெளியிட்டனரே யல் லாது, அவைகளின் குணாதிசயங்களையும் ஒற்றுமையையும் பற்றி வரையறுத்துக் கூறவில்லை. அந்நேர்நெறியைக் கொண்டு, அவருடைய தர்க்க முறையைப்பற்றி, மேன் மேலும் உன்னியுன்னிப் பார்த்து, முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் யாவற்றையும் தீர்க்கமாக ஆராய்ந்து ஆலோசித்து, வாழ்க்கைத் தத்துவத்தை-பிர பஞ்ச மர்மங்களை-வெளிப்படுத்திய அந்த ஸோக்ரதனின் மிக பெரிய சிஷ்யரான பிளாத்தனைப்பற்றி முன் கூறி யுளோம். இப்பொழுது, அப்பிளாத்தனின் பிரதம சிஷ்ய ரான அரிஸ்தோத்லனது சித்தாந்தங்களை, அடியிற் கண்டவாறு அறிவிப்போம்.

கி. மு. 385-4-ம் ஆண்டில், ஷால்ஸிதிக் தீபகற்பத்தி லுள்ள ஸ்தாஜிரஸ் என்ற நகரில், வைத்தியர் குடும்ப மொன்றில் பிறந்தவர். 18-ம்பிராயத்தில், மேற்படிப்பின் நிமித்தம், தகப்பனால் இவர் ஆதென்ஸ்மா நகர்க்கு அனுப்பப்பட்டுப் பிளாத்தனது பள்ளியிற் சேர்ந்து, அவ் விடத்தில், 20 வருடகாலந் தங்கியிருந்து, அப்பிளாத்தன் இறக்கவே, அவ்விடத்தினின்று அகன்றார்.

பின் மாஸிதோனியாவின் இளவரசனான அலெக்ஸாந் தரனின் போதகாசிரியராக அமர்ந்திருக்கையில், அவ்

விளவரசனின் தந்தை கொலை செய்யப்பட் டிறந்த பொழுது அவன் சிங்காதன மேறவே, இவர் அவனிட மிருந்து பிரிந்து, ஓர் பள்ளிக்கூட மேற்படுத்திப் பற் பலக் கலைகள் கற்பித்தும், உயர்தர நூற்கள் எழுதியும், தத்வ வுபந்நியாசங்கள் செய்தும் இருந்து, 62-ம் வயதில், நெடுந்துயிலி லாழ்ந்தனர்.

* * * *

பாரமார்த்திகம் தெய்விகத்வமே (Spirituality) உண்மையெனவும், இவ்வுலகும் உலகாதிகளும் அதனின் தோற்றங்களே யெனவுங்கொண்டு, அத்தெய்விக உல கையே சிறப்பித்துக்கூறி, இக்காட்சி யுலகு வெளியான விதத்தைத் தகுந்தபடி தெளிவாக விளக்காதுவிடுத்தனர் பிளாத்தன். ஆனல். சத், அல்லது உண்மை யென்பது இக்காட்சி உலகிலேயே உறைந்து கிடப்பதாகக்கொண்டு, இவ்வுலகாதிகளைக் கூர்ந்து எண்ண வாரம்பித்தனர் அரிஸ்தோத்லன். நாம் வசித்துவரும் இவ்வுலகில், கண்டு உணர்ந்து அறிந்து அநுபவிக்கும் விஷ யங்களின் இயல்பையும் சீர்மையையும் ஆழ ஆராய்ந்து, இவைகளின் வழியாக யாவற்றிற்கும் புறம் பான சாச்வத வஸ்துவை இவர் அநுமானித்தார். இன்னமும், பக்தியும் மதியூகம் அல்லது சுய ஞானமுமே சத்தை உணர்த்தவல்லன வெனவும், அவைகளி னுதவி யில்லாமல் புத்தி மாத்திரம் அதை அறிதற்கியலாதெ னக் கொண்டவர் பிளாத்தன் (Plato).

அரிஸ்தோத்லனோ வெனில், புத்தியை (வியவகாரிக ஞானத்தையே) முற்றிலுங் கடைப் பிடித்தவர்; ஆதலி னற்றான், இவருடைய சிந்தனைகளும் சித்தாந்தங்களும் இவ்வுலகத்தை விட்டு உயரவில்லை; அரசியல் முறை, நீதி அல்லது ஒழுக்க முறைகளைப்பற்றிய இவருடைய கொள்கைகளைக் கவனித்துப் பார்ப்பின், அவைகள் இம்மைக்கே பொருத்தமுளவா யிருப்பதை அறியலாம். புலனுணர்வு, அல்லது காட்சியறிவினின்று சீரியஞானம் விகிசிப்ப தில்லையெனப் பிளாத்தன் கொண்டனர். அரிஸ்தோத்லனோ, காட்சியறிவினின்று வியவகாரிக ஞானம் பெருகி, இதின் மூலமாகக் காரணங்களும் குணங்களும், அல்லது விஷயாதிகளின் தாரதரங்களும் புலனாகின்றன; விசாரிப்பில்லாது அறிவு சுரக்காது, பொதுத் தன்மையறிவு (Generalisation) இல்லாது விசாரணையிற் புகமுடியாது எனக் கொண்டனர்.

இவ்விதியை உதாகரிப்போம்: "இது ஓர் விளா மரம்" எனக் காட்சி யறிவால் சடுதியில் அறிந்து கூறி விடுவதாக நாம் எண்ணுகிறோம். ஆனல், உண்மையில், நானாவித மரங்களை ஒத்திட்டுப்பார்த்து, உரு - நிறம் - பருமன் - வளரும் விதம் - பழுக்குங் கனி - இக்கனியின் ருசி முதலாயினவைகளை ஆராய்ந்து, மரவர்க்கங்களுக் குள்ள வித்தியாசங்களை அதாவது ஒவ்வொன்றின் விசேஷக் குணங்களை அறிகிறோம். இவ்வாறு ஒவ்வொரு ஜாதியின் பொதுத்தன்மையை - பிரத்தி யேக குணாதிசயங்களை ஆராய்ச்சி மூலமாக அறிந்து நிர்ணயித்து, ஆல மரத்தைக் கண்டவுடன் ஆலமர மென வும், கொய்யாச் செடியைப் பார்த்துக் கொய்யாச் செடி யெனவும் பகுத்தறிகிறோம். இதையே இவர் பொதுக் குண அறிவு (Knowledge of the Universals) எனப் பெயரிட்டனர். இவருடைய இப் பொதுக்குண அறி வுக்கும் பிளாத்தனின் மூலதத்துவ அறிவுக்கும், வாஸ்த வத்தில், யாதொரு பேதமுமில்லை எனினும், மூல தத்துவ அறிவு என்பது அனைத்திற்கும் அப்பால், தன் னந்தனியாய் நிற்பது; இதுவே உண்மை; அதனின் அரையுங் குறையுமான கருக்களே இவ்வுலகாதிகளென முடித்தனர் பிளாத்தன். ஆனல், அரிஸ்தோத்லன் படிக்கு, பொதுக் குண அறிவு மனத்தின் வேலையாகும்; காட்சிப் பொருட்களில்லை யானல், அவ்வறிவு உண்டா காது; ஞானத்தினிமித்தம், நம் சித்சக்தியால் காட்சிப் பொருட்களினின்று அப்பொதுக்குண அறிவுகள் பிழிந்தெடுக்கப் பட்டனவே யல்லாது, நிர்த்தொந்த மாய், உருவற்று நிற்பன வல்லவாம்; சுருக்கத்தில், காட்சி களும் காட்சி யறிவுமே மிகப் பிரதானமாவன, நம்பத் தக்கன எனக் கொண்டவர் அரிஸ்தோத்லன்.

(தொடரும்) T. R. இராஜகோபால்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதா ரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தா தாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனி மையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்க ளுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண் டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவை யாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும் பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக் கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கயாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

“கலாநிலயம்”

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

“கலாநிலயம்”

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sauskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஐ. ஸி. எஸ். பரீட்சை:—சமீபத்தில் நடந்த ஐ. ஸி. எஸ் பரீட்சையில் 45 பேர் தேறியுள்ளார்கள் என்று இந்திய ஸிவில் ஸர்விஸ் கமிஷனர் அறிவித்துள்ளார். இவர்களில் முதல்ஐவரும் ஆங்கிலேயர் மற்றவர் இந்தியர்கள். ஸ்ரீமான்களான எம். அநந்தநாராயணன், வி. ராமஸ்வாமி, எம். சேஷாத்ரி எனபவர் சென்னை வாசிகள்.

***

புத்தகப் பறிமுதல்:—காலஞ்சென்ற ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் கண்ணன்பாட்டு, நாட்டுப் பாட்டு முருகன்பாட்டு முதலிய பாடல் புத்தகங்களை இந்திபிரசாரக சபையினிடமிருந்து சென்னைப்போலீசார் சென்ற வாரத்தில் பறிமுதல் செய்தனராம். ஜூலை மாதத்தில் முதன் முதலாகப் பர்மா கவர்ன்மெண்டார் நவீன கதா புத்தகசாலையாரிடமிருந்து பாரதியார் புத்தகங்களைப் பறிமுதல் செய்துளரென்றுந்தெரிகிறது.

***

யுத்தகளவாடங்களைக் குறைக்கமுயற்சி:- ஜினீவாவில் நடைபெறும் சர்வதேச சங்கப் பொதுச்சங்கக் கூட்டத்தில் 1928-ம் வருஷ முடிவிலாவது, அல்லது மறு வருஷத்தின் ஆரம்பத்திலாவது ஆயுதப் பரிகரண மகா நாடு கூட்டவேண்டுமென்றும், அதில் எல்லா கவர்ன்மெண்டாரும் ஒரேவிதமான முடிவிற்கு வரவேண்டும் என்று விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும் என்றும் ஒரு பிரேரேபணை கொண்டுவரப்பட்டது. ப்ரான்ஸ்கா ஜெர்மன் தீர்மானங்களை அனுஸரித்துப் பிரேரேபணை தயாரிக்க ஒரு கமிட்டி ஒன்று நியமிக்கத் தீர்மானிக்கப் பட்டது.

***

சம்மத வயது கமிட்டி:—பெண்களின் சம்மத வயதை நிர்ணயிக்கும் பொருட்டு நியமனமான கமிட்டியார் ஸெப்டெம்பர் ௴ 19உ லாகூரில் இரண்டு புருஷர்களையும்மூன்று ஸ்திரீகளையும் விசாரணைசெய்தனர் ராஜா நரேந்திரநாத் என்பவரின் மனைவி கூறிய சாட்சியம் வருமாறு .—

பெண்களுக்கு இளவயதில் கல்யாணம் செய்வது நல்லதன்று. உடன்கட்டையேறுதல் நிறுத்தப்படவில்லையா? 18-வயது வரையில் பெண்கள் கலியாணம் செய்யப்படாமல் இருக்கலாம். புருஷர்கள் 23-வயதிற்கு மேல்தான் கல்யாணம் செய்துகொள்ளலாம். இளவயதில் பெண்கள் பிரசவிப்பதனால் அவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்படுவதோடும், குழந்தைகளும் நோயால் பீடிக்கப்பட்டு அதிகமாய் இறந்து விடுகின்றன. இப்பொழுது செய்ய விருக்கும் சட்டமும் கலியாண வயதை 13 ஆக நிர்ணயித்திருப்பதால் இந்துக்களும் முஸ்லிம்களும் மற்ற வகுப்பினரும் ஆக்ஷேபம் இல்லாமல் ஆதரிக்கலாம்.

***

சென்னை ஸம்ஸ்கிருதக் கல்லூரி:—14-ந்தேதி சென்ற வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஸ்ரீசாரதா விலாஸ ஸபையின் ஆதரவில் திருவையாறு ஸமஸ்கிருத கல்லூரி பிரதான மீமாம்ஸ பண்டிதர் டி. டி. தாதாசார்ய சிரோமணியின் அக்கிராஸனத்தின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. எல்லா உபாத்தியாயர்களும் மாணவர்களும் வந்திருந்தனர். மங்களார்ணம் முடிந்தவுடன் மேற்படி சபையின் காரியதரிசி ஸ்ரீமான் எம். எஸ். கச்சபேச்வான் அக்கிராசனரை வரவேற்று வடமொழியில் பேசிய பிறகு, முத்துகிருஷ்ணன் என்னும் மாணவரால் புத்திமான் பலவான் ஆவான்' என்ற விஷயமாக ஒரு வியாசம் எழுதிப் படிக்கப்பட்டது. பிறகு மாணவர்கள் அதை ஆதரித்துப் பேசினார்கள். பலத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனர் எழுந்து முற்றுரையாக ஸம்ஸ்கிருதத்தின் கௌரவத்தையும் தற்கால நிலைமையையும் மிகவும் சிறந்த கோட்பாடுகளுடன் இனிய நடையில் உபன்யவித்துச் சபையோர்களை இன்புறச் செய்தனர். காரியதரிசி தலைவருக்கு வந்தனோபசாரங்கூறச் சபை இனிது கலைந்தது

***

கனம் சாஸ்திரியார் விருந்தில் கலகம்:—தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென நியமிக்கப்பட்ட ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்கள் இந்தியா திரும்பப் போவதைக் குறித்து இந்தியர் அவருக்கு 14-ந் தேதியன்று ஒரு விருந்தளித்தனர். அக்காலை இவான்ஸ் என்பானும் வேறு 30 வாலிபர்களும் பலவந்தமாய் உள்ளே நுழைந்து அக்னி திராவகத்தை எங்கும் ஊற்றினர் என்றும், கோழிமுட்டைகளைக் கூடியிருந்தோர்மேல் அடித்தனர் என்றும தெரிகிறது. சாஸ்திரியார்மேல் அடியொன்றும் படவில்லையென்று தெரிகிறது. பிறகு போலீசார் தலையிடக் கூட்டத்தில் ஒழுங்கு ஏற்பட்டதாம் இச்சம்பவத்தைக் குறித்துத் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் வருந்துவதாக அறிவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள் என்றும், இந்திய அரசாங்கத்தாருக்கு இந்நிகழ்ச்சிக்கு வருந்துவதாகத் தந்தியொன்று கொடுத்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது. தென்ஆப்பிரிக்கப் பத்திரிகைகளும் இவான்ஸின் செயலைக் கண்டித்துள்ளனர். இவான்ஸின் பேரிலும், அவனது துணைவர்களின் பேரிலும் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று கூறுகின்றனர்.

***

சைமன் கமிஷன் இந்திய விஜயம்:—சைமன் கமிஷன் அங்கத்தினர்கள் அக்டோபர் மாதம் 10-ந்தேதியன்று பம்பாய் வந்திறங்குவார் என்றும், 12-ந்தேதி பூனச்சென்று வேலை துவக்குவார் என்றும் ஒரு செய்தி கிடைத்துள்ளது. இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சங்கங்கள் கமிஷனின் யோசனைக்குவிடஅறிக்கையைத் தயார் செய்திருக்கின்றனவாம். அது வருமாறு :—

இந்தியாவில் பல பாஷைகளும், பல மதங்களும், அதனால் எழும் பூசல்களும் இந்திய விடுதலைக்கு முதற்றடையாகும். மாகாணங்களில் இந்தியர் பொறுப்பை அவர் ஏற்றுத் தம் தகுதியைக் காட்டுமுன் மத்திய அரசாங்கத்தில் பொறுப்பாட்சி தருவது தவறாகும் என்பதை இச்சங்கத்தார் தெரிவித்துக்கொள்கின்றனர். இந்தியச் சட்டசபைப் பிரதிநிதித்துவ முறை இப்பொழுதே சரியில்லை. எனவே ஓட்டுரிமையை இன்னும் பலருக்கு அளிப்பது பொருந்தாச் செயலாகும். மாகாணங்களைப்பற்றிய வரையிலேயே வாக்காளர்கள் படிப்பில்லாதவர்களாய்த் தங்களது பொறுப்பைத் தெரியாதிருக்கின்றனர். இந்நிலையில் ஓட்டுரிமையை இன்னும் விஸ்தாரப்படுத்துவது பொறுப்பாட்சிக்கு இடையூறாய்த்தானிருக்கும். தாங்கள்பெற்ற ஓட்டுரிமையைச் சரியே உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரியாதார் அனுப்பும் பிரதிநிதிகள் ஜனப்பிரதிநிதிகளாவார்களா? இன்னும் கொஞ்சகாலம்வரையில் இந்தியாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே வரவேண்டும். மாகாணங்களில் சட்ட சபையைத்தவிர மற்றோர் சபையொன்றும் ஏற்படுத்தவேண்டும். மாகாணச் சட்டசபையில் நிறைவேறும் தீர்மானங்கள் கவர்னர் ஜெனரலும் அவரது சபையினரும் ஆமோதித்தது ஏற்காது அமுலுக்கு வரலாகாது. ஐரோப்பிய உத்தியோகஸ்தர் விஷயமாய் லீ கமிஷன் சிபார்சுகள் அனைத்தும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சுதேச சமஸ்தான விஷயத்தைக் கவனிக்கச் சுதேச சமஸ்தான பிடரேஷன் என்ற ஒரு சபை ராஜப்பிரதிநிதியின் தலைமையின் கீழ் ஏற்படவேண்டும். இப்பொழுது இருக்கும் இராஜாங்கசபை அமைப்பில் மாறுதல்கள் ஒன்றும் ஏற்படவேண்டியதில்லை. இந்திய சட்டசபையில் கமாண்டரின் சீப்பிற்குப் பதிலாகச் சைன்ய விஷயத்தைக் கவனிக்க ஓர் உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டும். அஸ்ஸாம் மாகாணத்தைப் பிரிக்கக்கூடாது.

189022

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)